Vol. III Issue 7 October 2013
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

### ஸ்ரீ கர்மயோகியின் புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| அன்னையின் ஆன்மீகப்பரிசு | ரூ.100/- |
| லைப் டிவைன் - கருத்துகள் | ரூ.100/- |
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |
| The Nectar of Grace | ரூ.100/- |

### சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| SATYA JYOTHI<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
☎: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
Priams, 'Golden Wattle', கதவு எண் 36,
கோபால் தெரு, அருணா ஹோட்டல் அருகில்,
தி. நகர், சென்னை - 600 017.
☎: (044) 24347191

Vol. III Issue 7 October 2013

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## அக்டோபர் 2013

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. III Issue 7 October 2013

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 2 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 12 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 13 |
| யோக வாழ்க்கை விளக்கம் . . . . . | 15 |
| நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . | 17 |
| அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் . . . | 23 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டுவரும் இரகசியங்கள் . . | 28 |
| திருடு போன Electric Drill மீண்டும் கிடைத்த விதம் . . . . . . . . . . . | 32 |
| மனித வாழ்வின் சூட்சுமங்கள் . . . | 39 |
| உண்மையின் பல்வேறு பரிமாணங்கள் . . . . . . . . . . . . | 41 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 49 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 52 |
| அன்னை இலக்கியம் . . . . . . . . . | 54 |

## ஜீவியத்தின் ஓசை

**எல்லாம் எல்லாவற்றுள்**

**இருப்பதால்**

**எதிலிருந்தும் எதையும்**

**உற்பத்தி செய்யலாம்.**

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

கர்மயோகி

# XXVI. The Ascending Series of Substance

Page 252
Para 1

Let us consider Matter,
What is its materiality?
What represents its materiality?
They are four in number.
Solidity, tangibility, increasing resistance are some.

Firm response to the touch of Sense is another,
Substance seems more truly material,
It is real in proportion as it presents to us,
It presents a solid resistance to us,
By virtue of that resistance a durability of sensible form.
Our consciousness dwells on it.
In proportion it is more subtle, it appears less material.

It is less densely resistant.
It is enduringly seizable by the sense.
This is our attitude to Matter,
It is our ordinary consciousness,
Matter has been created for an object,
It is an essential object,



# 26. உயரும் பொருளின் அடுக்குகள்

ஜடத்தை நாம் ஆராய்வோம்,
ஜடத்தின் தன்மை என்ன?
எது ஜடத்தின் தன்மையைக் குறிக்கிறது?
ஜடத்தின் நான்கு குணங்கள் அவை.
திடத்தன்மை, தொடு உணர்வு, தொட்டால் தடை எழுப்புவது
சில குணம்.
தொடு உணர்வுக்கு உரமாகத் தெரிவது அடுத்தது,
பொருள் ஜடமாகத் தெரிகிறது,
நாம் காணும் அளவுக்கு ஜடம் உண்மையாகிறது,
திடமான எதிர்ப்புக்குரியது ஜடம்,
அவ்வெதிர்ப்பால், திடமான தொடு உணர்வு எழுகிறது.
நாம் அதை உணருகிறோம்.
சூட்சுமம் குறைந்தால், ஜடத்தன்மை குறைவதாகத்
தோன்றுகிறது.
எதிர்ப்பு குறைகிறது.
உணர்வால் பிடிபடும்படியுள்ளது.
இதுவே ஜடத்திடம் நமக்குள்ள நோக்கம்,
இது நம் வழக்கமான ஜீவியம்,
ஜடத்தை ஒரு நோக்குடன் சிருஷ்டித்தார்,
இது முக்கிய நோக்கம்,

It is a symbol of that object,
Substance passes into material status,
It is to present to our consciousness,
It has to deal with it.
Firmly seizable images by us,
On which the mind can rest,
And base its operation,
And which Life can handle,
With at least a relative surety of permanence,
In the form upon which it works.
There is the ancient Vedic Formula of Earth,
It is a type of more solid states of substance,
It is a symbolic name,
It is of the material principle,
It was accepted by the Vedas,
There is an essential basis of Sense,
Touch or contact for us is it.
There are other physical senses,
They are taste, smell, hearing, sight,
They are more and more subtle,
They are indirect contacts.
It is between the percipient and the perceived.
Sankhya classifies.
It classifies the five elemental states of Substance.

We see their characteristic.



அந்த நோக்கத்தின் சிம்பலது,
பொருள் ஜட நிலையை அடைகிறது,
நம் ஜீவியம் அறிவதற்காக வேண்டி செய்கிறது,
நாம் ஜடத்தைக் கையாள வேண்டும்.
நமக்குத் தெளிவான தோற்றங்கள்,
மனம் அவற்றைத் தெளிவாக அறியும்,
மனம் அதனடிப்படையில் செயல்படும்,
இவற்றை வாழ்வு ஏற்றுச் செயல்படும்,
நிரந்தரமான உத்திரவாதம் பெற்று,
அது செயல்படும் ரூபம்.
பழைய வேத காலத்துச் சட்டம் பூமியை விவரிக்கிறது,
திடமான பொருளின் நிலையின் ரகம்,
அது சிம்பலான பெயர்,
அது ஜடத்தின் சட்டம்,
வேதம் அதை ஏற்றது,
புலனுக்கு முக்கிய அடிப்படையுண்டு,
தொடர்பு அல்லது தொடு உணர்வு அவ்வடிப்படை.
மற்ற உடலுக்குரிய புலன்கள் உள்ளன,
அவை ருசி, வாசனை, பார்வை, கேட்பதாகும்,
அவை மேலும் மேலும் சூட்சுமமானவை,
அவை மறைமுகமான தொடர்புகள்.
பார்ப்பவருக்கும், பார்க்கப்படுவதற்கும் உள்ள தொடர்பு.
சாங்கியம் பாகுபாடு செய்கிறது.
அது அடிப்படையான ஐந்து பொருட்களின் நிலையை
பாகுபாடு செய்துள்ளது.
அவற்றின் குணமான சுபாவத்தைப் பார்க்கிறோம்.

They are from ether to earth.
It is a constant progression,
It is from the more subtle to the less subtle,

It reaches the summit,
There we have the subtle vibrations of the ethereal.
At the base it is gross,
It is a density of the earthly condition,
It is a solid elemental condition,
Matter is the last stage known to us,
It is a progress of pure standards,
It is towards a basis of cosmic relation,
There is a first word,
It is not spirit but form,
It is a form in the utmost development.
It is one of concentration, resistance,
It is a durable gross image,
It is of mutual impenetrability,
It is culminating point.
It is one of distinction, separation and division,

There is material universe,
This is its intention and character,
It is the formula of accomplished divisibility.



அது ஆகாயம் முதல் பூமி வரையாகும்.
அது தொடர்ந்து வளர்ந்து உயரும் நிலை,
அதிக சூட்சுமத்தினின்று குறைந்த சூட்சுமத்திற்கு அது வருகிறது,
அது சிகரத்தைத் தொடுகிறது,
அங்கு ஆகாயத்தின் சூட்சுமக் கதிர்களைக் காணலாம்.
அடிப்படையில் அது ஜடமானது,
அது பூமாதேவியின் கனத்த நிலை,
அது உறுதியான மூலமான நிலை,
நமக்குத் தெரிந்தவரை ஜடம் முடிவானது,
தூய தரம் அது,
அது பிரபஞ்ச தொடர்பின் அடிப்படை,
அதற்கு முதலக்ஷரம் உண்டு,
அது ஆன்மா இல்லை ரூபம்,
அதிகபட்சம் உயர்ந்த ரூபம் அது.
எதிர்ப்பும் செறிவுமானது,
நிலையான ஜட ரூபம் அது,
ஒன்றையொன்று ஊடுருவ முடியாத நிலை,
அது முடியுமிடம்.
பிரித்து, பகுத்துணர்ந்து, அதன் தனித்தன்மையை உணர்வதாகும்,
ஜடமான இயற்கையுளது,
அதன் நோக்கமும், சுபாவமுமாகும் இது,
அது சிறப்பான பிரிவினையின் சூத்திரம்.

And if there is, an ascending series.
It must be in the nature of things.
It is a scale of substance.
It must be from Matter to Spirit,
It must be marked by a progressive diminution.
It is of these capacities,
Its most characteristic principle is the physical.
There is a progressive increase of the opposite,
It will lead us to the formula,
It is a formula of pure spiritual self-extension.
We can say it differently.
They must be marked less and less bondage to the form.
It is more and more subtle.
It is flexibility of substance and force.
There is more and more interfusion, interpenetration.
There is power of assimilation.
There is power of interchange.
There is power of variation, transmutation, unification.
It draws away from the durability of the form,
We draw towards eternity of essence,

Drawing away from our poise in the persistent separation
and resistance of physical Matter,
We draw near to the highest divine poise in infinity.



அப்படியிருந்தால், அது உயர்ந்து வளரும் அடுக்காகும்.
இருக்கும் நிலையில் அது இருக்க வேண்டும்.
அது பொருளின் அளவீடாகும்.
அது ஜடத்தினின்று ஆன்மாவுக்குப் போகும்,
தொடர்ந்து குறையும் ஸ்கேலாகும்.
இந்தத் திறமைகளின் ஸ்கேலாகும்,
அதன் குறிப்பிட்ட சட்டம் உடலுக்குரியது.
எதிரானது படிப்படியாக உயர்ந்து வளரும்,
அது சூத்திரம் தரும்,
ஆன்மா தன்னை சுயமாக வெளிப்படுத்தும் சூத்திரம் அது.
வேறு வகையாக அதைக் கூறலாம்.
ரூபத்திற்கு அடிமையாவது மேலும் மேலும் குறையும்.
மேலும் மேலும் சூட்சுமமாகும்.
பொருள் மிருதுவாகி, சக்தியை வெளிப்படுத்தும்.
மேலும் மேலும் இருபுறக் கலப்புண்டு, ஊடுருவும்.
கிரகிக்கும் பவர் உண்டு.
ஒன்றோடு ஒன்று கலக்கும் பவருண்டு.
மாறும் பவர் திருவுருமாறுவது, இணைவதுண்டு.
ரூபத்தின் திடமான நிலையினின்று அது விலகுகிறது,
ரூபத்திலிருந்து விலகுவதால் மூலத்தின் அனந்தத்தை
நாடுகிறது,
ஜடப்பொருளின் பிரிவினை, எதிர்ப்பிலிருந்து விலகுகிறது,

அப்படி விலகி அனந்த உச்சகட்டத்தை அடைகிறோம்.

We reach the unity and indivisibility of Spirit,
There is pure spirit substance.
There is a gross substance.
There must be antinomy.
In Matter Chit or Conscious-Force masses itself.
It more and more resists.
And it stands out against other masses,
They are of the same Consciousness.
There is the substance of Spirit.
There pure consciousness images itself.
It does so freely in its sense of itself.
It does so with an essential indivisibility.
And a constant unifying interchange,
It is the basic formula.
It is so of even the most diversifying play.
It is a play of its own Force.
There are two poles,
Between them there is the possibility of an infinite gradation.

Contd...

**ஜீவிய மணி**

ஆசை ஆர்வமானால்
பிராணன் ஆத்மாவாகும்.



ஆன்ம ஐக்கியம், பிரிக்க முடியாத நிலையை அடைகிறோம்,
தூய ஆன்மீகப் பொருளுண்டு.
ஜடப் பொருளுண்டு.
அவையிடையே எதிர்ப்புண்டு.
ஜடத்தில் சித்-சக்தி சேர்ந்து செறிவடைகிறது.
மேலும் மேலும் அது எதிர்க்கிறது.
மற்ற தொகுப்புகளை எதிர்த்து நிற்கிறது,
அவை அதே ஜீவியத்தைச் சேர்ந்தவை.
ஆன்மாவின் பொருளுண்டு.
அங்கு தூய ஜீவியம் தன்னை உருவகப்படுத்திக் கொள்கிறது.
அங்கு சுதந்திரமாக அது தன் புலனில் செயல்படுகிறது.
அடிப்படையில் பிரிக்க முடியாதபடி அது செயல்படுகிறது.
நிலையான ஐக்கியமாகும் பரிமாறுதலுடன் செயல்படுகிறது,
அதுவே அடிப்படையான சூத்திரம்.
அதிகப்படி மாறும் லீலையிலும் அப்படியே செயல்படுகிறது.
அது தன் சொந்த சக்தியின் லீலை.
இவை இரு முனைகள்,
இவையிடையே கணக்கற்ற அடுக்குகள் இருக்க முடியும்.

தொடரும்...

**ஜீவிய மணி**

இன்றைய ஆழ்ந்த உண்மை
பழைய பொய்யை மெய்யாக்கும்.

இம்மாதச் செய்தி

# ஊரும் உடலும் ஒன்றுபோல் அமைந்தவை





## Page 155: Still consciousness was hidden in Nature's womb

## இயற்கையின் கருவில் இரகஸ்யமாக உறையும் ஜீவியம்

- ✡ உலகை ஆட்கொள்ளும் ஆனந்தத்தின் கனவை உணர முடியவில்லை
- ✡ சக்தி விரட்டும் ஜடப்பொருளாக ஜீவனுள்ளது
- ✡ அது ஆகாயமாக ஆரம்பிக்கிறது
- ✡ அதன் பிரம்மாண்டமான சூழல் சுழன்று வலம் வருகிறது
- ✡ கருத்திலுதிக்காத எண்ணம் கருவாகச் செயல்படுகிறது
- ✡ உயர்ந்த மூலவனின் உயிர்மூச்சு தாங்கிப் பிடிக்கிறது
- ✡ புதிரான சிருஷ்டியின் செயல் சுருங்கி விரிகிறது
- ✡ சூன்யத்தை ஸ்பர்சித்து உராய்ந்து உணர்கிறது
- ✡ கருத்தைக் கடந்த சூன்யத்தில் ஏற்படும் பிடிப்பும் பிணக்கும்
- ✡ வளர்ந்து விரியும் பிரபஞ்சத்தின் தாயான தகப்பன்
- ✡ அழியும் சக்தியின் அழியா அமைப்பு
- ✡ அழியும் ஆக்கலின் முடிவற்ற முதல்
- ✡ இடமென்ற உறவில் ஏற்பட்ட பார்வையற்ற பெருநெருப்பு
- ✡ விதையாகத் தெளித்த வானுலக வாழ்வு
- ✡ விளங்கும் நட்சத்திரம் வெளிப்படுத்தும் பிரபஞ்சம்
- ✡ சமுத்திரமாக எழும் மின்சார சக்தி
- ✡ உருவமற்ற ரூபம் பெற்ற ஒளியின் துளிகள்
- ✡ வலுவான வாழ்வை வகுக்கும் அவர் லீலை
- ✡ அணுவில் அகப்பட்ட அபார சக்தி
- ✡ தெரியும் ரூபம் புனைந்த திடமான ரூபங்கள்
- ✡ ஒளி வீசியெறியும் அணுவின் பகுதி

✡ மின்னல் வீச்சின் கடுகனைய சிறு உருவம்
✡ புலப்படும் பிரபஞ்ச புதிரான பிம்பங்கள்
✡ சத்தியமான பிடிபடாத இவ்வுலகைச் சிருஷ்டித்தது
✡ மனம் ஏற்கும் விவரமான அதிசயம்
✡ மடமை மனத்தின் மகுடமான தோற்றம்
✡ சத்தியத்தின் நீதிமன்றத்தில் ஆசனம் பெற்ற எண்ணம்
✡ மனம் தொட்டுணர்ந்தது பிரபஞ்சம் ஏற்ற சத்தியம்
✡ எழும் சிருஷ்டியை ஏற்கும் சாட்சி மனம்
✡ அவனுடைய தவறான உணர்ச்சி கருவியின் கருவான செயல்
✡ பிடிபட்ட வாழ்வின் புதிரை அவன் ஏற்கும் வழிமுறையது
✡ ஒளியான ஐயம், சத்தியத்தை வென்ற தவறு
✡ உருவமும் திரையும் அவனைவிட்டு விலகும் பாணி
✡ மனமும் உணர்வும் கைவிட்ட நம்பிக்கை
✡ பிரகாசமான அஞ்ஞானத்தின் ஞானமான உடல்

## ஜீவிய மணி

தூய்மை முழுமையாகாமல் தீமையைச் சமாளிக்க முடியாது. முழுமையான தூய்மை தீமையை விட வலிமையானது. திறமைக்கு வலிமையுண்டு. பணத்தின் வலிமை அதிகம். பதவிக்குரிய வலிமை இவ்விரண்டையும் உட்கொண்டது. தூய்மை முழுமையானது. தூய்மையின் வலிமைமுன் அனைத்தும் தலைவணங்கும்.

இறைவனை மட்டும் நம்புவது தூய்மை.
உண்மை (Sincerity) தூய்மை.



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/2. சமர்ப்பணம் உடலுணர்வால் பூர்த்தியாகும்.

- சமர்ப்பணம் என்றால் மனித ஜீவன் தெய்வீக ஜீவனைச் சரணடைவது.
- ஜீவனுக்கு ஜீவியம், சக்தி, ஆனந்தம் உண்டு.
- சத், சித், ஆனந்தம் நம்மில் சத் ஜீவனாகவும், சித் ஜீவியமாகவும் சக்தியாகவும், ஆனந்தம் ஆனந்தமாகவும் உள்ளது.
- மனிதன் தெய்வத்திற்குச் செய்யும் சமர்ப்பணம் பூர்த்தியாக அவன் ஜீவனோடு ஜீவியம், சக்தி, ஆனந்தமும் சமர்ப்பணமாக வேண்டும்.
  (உடல், பொருள், ஆவி அனைத்தையும் தருகிறேன் என்பதுபோல)
- நடைமுறையில் எப்படிச் செய்வது?
- நான் ஒரு பொருளை தம்பிக்குக் கொடுத்தால், மனதாரக் கொடுக்கிறேன் என்கிறோம்.
  மனம் என்பது அகம்.
  அகத்தில் என் ஜீவன் உள்ளது. அது சம்மதிப்பது மனதாரச் செய்வது.
  அந்த ஜீவனுக்கு ஜீவியம் உண்டு.
  பொருளைக் கொடுக்க தம்பி வீட்டிற்குப் போனால் பொருள் மறந்து போவது, ஜீவன் தயாரானாலும் ஜீவியம் தயாரில்லை என்பது.
  கையில் கொடுக்கும்பொழுது நம் கையால் தவறி கீழே விழுவது சக்திக்குச் சம்மதமில்லை என்பது.
  கொடுத்தபின் நம் முகம் சுருங்குவது ஆனந்தம் சமர்ப்பணமாகவில்லை என்பது.

- செயலுக்குரிய நினைவு, பிரியம், உணர்ச்சி உண்டு.

  நினைவு அறிவுக்குரியது.

  பிரியம் நெஞ்சுக்குரியது.

  உணர்ச்சி உடலுக்குரியது.

  சமர்ப்பணம் உடல் உணர்வில் பூர்த்தியாவது, முன்சொன்ன நான்கு நிலைகளிலும் பூரணமாவது.

- பேச்சு வழக்கில் ஆத்மார்த்தமாகச் சொன்னேன் என்பதும், மனப்பூர்வமாகக் கூறுகிறேன் என்பதும் மேற்சொன்ன பூரண நிலைகள்.

- ஆத்மார்த்தமாகச் செய்பவன் அதைச் சொல்ல மாட்டான். செயல் ஆத்மார்த்தமாக இல்லை, மனப்பூர்வமாக இல்லை என்பதை அறிவதால் செயலின் குறையை சொல்லால் நிரப்ப முயலும் பழக்கம் இது.

- ஒரு உதவி கேட்டால் செய்யப் பிரியப்படுபவன் செய்வான். பிரியப்படாதவன் சொல்வான், பலமுறையும் கூறுவான். சொல்பவன் செய்ய மாட்டான் என நம் வழக்கு அறியும்.சகுனம் தலைகீழே தெரிவது, கனவு தலைகீழே பலிப்பது ஆகியவை சிருஷ்டியில் மேல் உள்ள நான்கும் (சத், சித், ஆனந்தம், சத்திய ஜீவியம்) கீழுள்ள நான்காக (ஜடம், வாழ்வு, மனம், சைத்திய புருஷன்) மாறுவதினின்று எழுவது, **The Life Divine**-இல் 27ஆம் அத்தியாயம் கூறுவது.

- சமர்ப்பணம் யோகத்தில் முதல் **discipline**.

  ஆரம்பிப்பது அரிது.

  ஆரம்பிப்பவர் முழுமையாகச் செய்வது நாமறியாதது.

  பகவானும், அன்னையும் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தனர்.



# நெஞ்சுக்குரிய நினைவுகள்

## வேதம், உபநிஷதம், கீதையின் கருத்துகளின் சாரம்

(பகவான் எழுதியவற்றிலிருந்து எடுத்த கருத்துகள் இவை)

கர்மயோகி

1. வேதம் 2500, 3000 ஆண்டுகட்குமுன் எழுதப்பட்டது என்பது பொதுவான கருத்து.
   பகவான் இதை ஏற்பதாக எழுதுகிறார். நட்சத்திரங்கள் நாளாக நாளாக தம்மிடம் பெயர்வதாகவும், அதன்படி வேதம் கூறும் நட்சத்திரங்களின் அமைப்பின்படி வேதம் 18,000 ஆண்டுகட்குமுன் எழுதப்பட்டிருக்கலாம் என யூகிக்க முடியும் என பகவான் கூறுகிறார்.
2. வேதகாலத்தில் மக்கள் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தார்கள். நதிகளை ஜீவநதிகள் எனவும், தெய்வமாகவும் வழிபட்டனர். மலைகளை இமவான் எனவும் குறிப்பிட்டனர்.
3. மனிதனுக்கு வேத காலத்தில் ஆத்ம விழிப்பு இருந்தது. மனம் ஏற்படவில்லை.
4. கடவுள்களைத் — பிரம்மா, விஷ்ணு, சிவன் — தொழுது அவர்கள் மூலம் சச்சிதானந்தத்தை எய்த மந்திரம், யாகம், யக்ஞம் பயன்படுத்தினர்.
5. கடவுள்களை ஜோதிமயமாகக் கண்டனர். எதிரான இருள் வடிவங்களையும் கண்டனர்.
6. ஞானத்தை சித்தி எனவும், கடவுளை அறிவது ஞானம் எனவும் கூறினர்.
7. அஞ்ஞானத்தை அசித்தி எனவும், கடவுளை அறியாததை அஞ்ஞானம் எனவும் கூறினர்.
8. கடவுளையடைய மந்திரம், யாகம், யக்ஞம் தவிர சரணாகதியை மேற்கொண்டனர்.
9. வேதகாலத்து மக்கள் வாழ்வு முழுமையானது, பிணக்கற்றது.
10. அவர்கள் தெய்வங்கட்கு மூன்று அம்சம் கொடுத்தனர்.

– எந்த ஒரு கடவுளும் முழுமுதற்கடவுள், மற்றனை-வரையும் தன்னுட் கொண்டவர்.
– எல்லாக் கடவுள்களும் சக்கரத்தில் எல்லா கால்களும் குடத்தில் சந்திப்பதுபோல் சமமானவர்கள்.
– எந்தக் கடவுளும் மற்ற எல்லா கடவுள்களுக்கும் புரோகிதன், வேலையாள் என உட்பட்டவன்.
– எல்லா கடவுள்களும் சத்திய ஜீவியத்தில் பிறந்தவர்கள்.

11. வேத காலத்தில் சத்திய ஜீவியம் அவர்கள் அறிந்தது.

### உபநிஷதம்

1. வேதத்திற்குப்பின் ஆயிரம் அல்லது இரண்டாயிரமாண்டு-களுக்குப்பின் எழுந்தது உபநிஷதம்.
2. அருகே அமர்ந்து சிஷ்யன் குருவிடமிருந்து ஞானம் பெற்றதை உபநிஷதம் — உடன் அமர்தல் — எனக் கூறுகிறது.
3. இவை எத்தனை, எவ்வளவு அழிந்து விட்டது எனக் கூற முடியவில்லை.
4. 32 உபநிஷதங்கள் இன்று முக்கியமாக விளங்குகின்றன. அவற்றுள் 18 தலையாயது.
5. ஈஸா உபநிஷதம், தயித்ரேய உபநிஷதம், கேனா உபநிஷதம் போன்றவற்றிற்குப் பகவான் மொழிபெயர்ப்பும், விளக்கமும் எழுதியுள்ளார்.
6. அவற்றின் சாரத்தை 44 பக்கங்களில் எழுதியுள்ளார்.
7. **The Life Divine**-இல் உபநிஷதங்களை 300 முறையும், வேதத்தை 87 முறையும், கீதையை 40 முறையும் குறிப்பிடுகிறார்.
8. உபநிஷதங்கள் கண்டவை:
   – ஜீவாத்மா
   – ஜீவாத்மாவின் பகுதிகள்
   மனத்தின் பகுதி — மனோமய புருஷன்
   பிராணனின் பகுதி — பிராணமய புருஷன்
   உடலின் பகுதி — அன்னமய புருஷன்
   ஆத்மாவின் பகுதி — சைத்திய புருஷன்



மனோமய புருஷன் புருவ மத்தியிலும், பிராணமய புருஷன் நாபியிலும், அன்னமய புருஷன் மூலாதாரத்-திலும், சைத்திய புருஷன் கட்டை விரல் பரிமாணம் நெஞ்சுக்குப் பின்னாலும் உள்ளன எனக் கூறினர்.

9. புல், பூண்டு, தாவரம், விலங்கு, மனிதன் என்ற பரிணாம வளர்ச்சி உண்டு என்றனர்.
10. பிரம்மம் தவிர உலகில் மற்றெதுவுமில்லையெனவும், சர்வம் பிரம்மம் எனவும் கூறினர்.
11. சோஹம், அஹம் பிரம்மாஸ்மி “நானே பிரம்மம்” “சர்வம் பிரம்மம்” “நீயும் பிரம்மம்” “ஆத்மா பிரம்மம்” என்ற நான்கு மந்திரங்களை எழுதினர்.
12. சத் புருஷனின் நிலையென்ன? அகந்தைக்கும் அவனுக்கு-முள்ள தொடர்பு என்ன? எதனால் மற்றது எழுந்தது? என்ற கேள்விகளை எழுப்பினர்.
13. பிரம்மம் முடிவானது. அனந்தமானது. சாஸ்வதமானது என்றனர்.
14. பிரம்மம் உலகை உற்பத்தி செய்தது, சிருஷ்டித்த வகை தெரியவில்லை என்றனர்.
15. எல்லா உணர்ச்சிகளும் ஆனந்தத்தில் முடிவடையும்.
    எல்லா எண்ணங்களும் சத்தியத்தில் முடியும்.
    எல்லா செயல்களும் நல்லதில் முடியும்.
    எல்லா அசைவுகளும் அழியாத வாழ்வில் முடியும் என்றனர்.
16. வலியும், சந்தோஷமும் பிரிக்க முடியாமல் பிணைக்கப்-பட்டன.
    ஆசையும், பாசமும் அது போன்றவை.
    ஒன்றை நாடினால் மற்றது தவறாது உடன் வரும்.
    அதனால் வலியை, ஆசையை விலக்க சந்தோஷத்தையும், பாசத்தையும் நாடக்கூடாது என்றனர்.
17. எல்லா ஜீவாத்மாவும் பரமாத்மாவிலிருந்து எழுந்து மீண்டும் பரமாத்மாவை அடைகின்றன.
18. பிரம்மம் எவர் முடிவுக்கும் கட்டுப்பட்டதில்லை.
    (ஸ்ரீ அரவிந்தம்)
    பிரம்மம் எந்த முடிவும் எடுக்கக் கூடியதில்லை.

19. கடுமையும், கொடுமையும் இருளாகும். அவற்றை மனிதனால் சமாளிக்க முடியாது.
பக்தியாலும், வரத்தாலும் அவற்றிலிருந்து நாம் தப்ப முடியும்.
20. வேதம் கூறிய சத்திய ஜீவியம் அவர்கள் அறிந்ததே. அவர்கள் அதை விவரமாகக் கருதவில்லை. பொருட்படுத்தவில்லை.

### ஸ்ரீமத் பகவத் கீதை

1. மகாபாரதத்தில் போர்க்களத்தில் கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும் 700 சுலோகங்கள் கீதை எனப்படும்.
2. எதிரி யார் எனப் பாராமல், க்ஷத்திரிய தர்மமான போரில் அர்ஜுனன் போரிட வேண்டும் என்பது உபதேசம்.
3. கீதையின் முக்கிய கருத்துகள்:
   - பலன் கருதாது கடமையைச் செய்யவேண்டும். நிஷ்காம்ய கர்மம் அது.
   - ஆத்மா எதை ஆழ்ந்து விரும்புகிறதோ அதாக மனிதன் மாறலாம்.
   - சர்வ தர்மங்களையும் கிருஷ்ண பரமாத்மாவுக்குச் சரணம் செய்தால் மோட்சம் கிடைக்கும்.
4. பகவான் ஸ்ரீ அரவிந்தர் **“Essays on the Gita”** என்ற நூலை எழுதியுள்ளார்.
5. கடுந்தவம், சரணாகதி தத்துவத்தால் விலக்கப்படுகிறது.
6. உபநிஷத காலத்தில் மனம் உருவானதுபோல் கீதை காலத்தில் பக்தி எழுந்தது.
7. கீதைக்குமுன் பக்தி யோகப் பரம்பரையில் இல்லை.
8. பக்திக்குரியது சைத்திய புருஷன்.
   சைத்திய புருஷன் மோட்சம் தரும். நாம் விரும்பினால் திருவுருமாற்றம் தரும்.
9. கடமையைப் பற்றற்று செய்வதால் மோட்சம் பெறலாம் என்பது கீதை.
10. கிருஷ்ண பரமாத்மா சாரதியாகி ஆயுதம் தாங்காமல் போர்க்களம் வந்து போரை வென்றார்.
11. பாண்டவர் கௌரவர் என்பது சத்தியம் பொய் என்ற கட்சிகள். பொய் பதவியிலிருந்தால் மெய்யை ஏற்காது.



மெய்யை ஏற்றாலும் ஏற்றபடி நடக்காது.
பொய் தானே தன் கையிலுள்ள பதவியை விடாது. அதை அழித்தே பெற முடியும்.
பொய்யான இவ்வுலகில் பொய்யை அழிக்க கலப்பற்ற சத்தியத்திற்குத் திறனில்லை.
ஓரளவு பொய் கலக்காமல் — தருமர் சொன்ன பொய், அஸ்தமன சூரியனை பொய்யாக்கியது — பரமாத்மாவாலும் பொய்யைத் தோற்கடிக்க முடியாது என்பவை கீதை கூறும் பாடங்கள்.
12. தர்மம் கைவிடலாம், கணவன் கைவிடலாம், ஆசாரியன், குரு, பிதாமகன் கைவிடலாம்.
தெய்வம் குரல் கேட்டு அபயம் தரும் என்று திரௌபதி கண்டாள்.
தெய்வம் அபயம் தர, தெய்வத்தை நம்பும் பொழுது மற்ற எதையும் நம்பக் கூடாது.
தெய்வத்தை மட்டும் நம்புபவரைத் தெய்வம் கைவிடாது.
13. தவத்தால் செய்வதை சரணாகதியால் பெறலாம் என்பது உடல் உழைப்பால் பெறுவதை, நம்பிக்கையால் பெறலாம் எனலாம்.
நம்பிக்கையால் பெறுவதை, நம்பிக்கையையும் இழந்து எளிதில் பெறலாம்.
14. பலன் கருதாமல் கடமையைச் செய்தால் உயர்ந்த பலன் வரும். ஏராளமான பலன் வரும் என்பது அனுபவம்.
15. கோபிகைகள் கிருஷ்ணன்மீது கொண்ட பக்தி உலகில் நிகரில்லாதது.
கோபிகைகள் கிருஷ்ணனை நாடினர்.
கிருஷ்ணன் ராதையை நாடினான்.
எனவே, அவள் பக்தி உயர்ந்தது.

### பூரண யோகம்

1. மனிதன் முடிவல்ல. அடுத்த கட்டத்தில் சத்திய ஜீவன் உதயமாவான்.
2. ஆத்மா மனத்தைவிட உயர்ந்தது என்று மரபு கூறுவதை பகவான் உலகம் முழுவதும், இருளுக்கு அடியிலும் ஆத்மா உள்ளது என்று கூறுகிறார்.

3. ஆத்மா அசைவற்றது. ஆதி அந்தமற்றது என்று மரபு கூறுவதை பகவான் ஏற்கிறார்.
ஆத்மா பரிணாமத்தால் வளரும் என்கிறார். தன் யோகத்தை பூரண யோகம், எல்லா யோகங்களும் இணைந்த யோகம், என்றவர் ஆத்ம பரிணாம யோகம் என்றார்.
4. பிரம்மம் எப்படி சிருஷ்டித்தது எனத் தெரியவில்லை என ரிஷிகள் கூறிய பொழுது அகம், புறம், எனப் பிரம்மம் பிரிந்து சிருஷ்டித்தது என பகவான் கூறுகிறார்.
5. சிருஷ்டியை பகவான் மூன்றாகப் பிரித்து 1) சிருஷ்டி 2) சிருஷ்டி தன்னுள் தன்னைக் கிரகித்தது 3) பரிணாமம் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டது என்று விளக்கம் கூறுகிறார்.
6. மாயை என்பது இல்லாதது இல்லை. மாயை சிருஷ்டிக்கும் கருவி என்கிறார்.
7. அகம், புறம் எனப் பிரிவது சிருஷ்டியின் இரகஸ்யம்.
அது நிகழ்வது
   1) பிரம்மம், அகம் பிரம்மம், சிருஷ்டி புறம்.
   2) சச்சிதானந்தம் அகமாகவும் சத்திய ஜீவியம் புறமாகவும் பிரிகின்றன.
   3) வாழ்வு (existence) ஆத்மா என்ற அகமாகவும், சத்தியம் என்ற புறமாகவும் பிரிகிறது.
   4) ஆத்மா காலம் என்ற அகமாகவும், இடம் என்ற புறமாகவுமாகிறது.
8. சத்திய ஜீவியம் இரண்டாகப் பிரிந்து இடையில் மனம் உற்பத்தியாகிறது.
(இதுவும் அகம் புறமாகப் பிரிவது)
9. பரமாத்மா அகம் புறமாகப் பிரிவது, பரமாத்மா அகம், ஜீவாத்மா புறம்.
10. ஜீவன் ஜீவியமாகப் பிரிவதும், ஜீவியம் ஆனந்தமாகப் பிரிவதும் அகம் புறமாகப் பிரிவதாகும்.
11. பூரண யோகத்தில் பிரம்மம் எந்த முடிவாலும் கட்டுப்படாதது.
12. பூரண யோக பிரம்மம் அனந்தமான அனந்தம்.

★ ★ ★ ★



## அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

### *17. ஓர் அமெரிக்க அன்பரின் அனுபவம்*

அன்னையைப்பற்றி ஓர் அமெரிக்க அன்பர் எனக்கு ஒரு குறிப்பு எழுதியிருந்தார். அது அவருடைய சொந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. அன்னையின் அன்பர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தால், அந்த அன்பரின் குறிப்பை அப்படியே தருகின்றேன்.

“நான் கல்லூரிப் படிப்பை 1976இல் முடித்துக் கொண்டேன். அமெரிக்காவில் வாழும் அன்னையின் பக்தர்கள் சிலர் இணைந்து, அன்னை ஸ்ரீ அரவிந்தர் கருத்துகளின் அடிப்படையில் தம் சொந்த வாழ்க்கையையும், தொழிலையும் நடத்தி வந்தார்கள். நான் அவர்களோடு மூன்று ஆண்டுகளைக் கழித்த பிறகு, அவர்களை விட்டு, விலகிச் சென்று சொந்தத்தில் தொழில் ஒன்றைத் தொடங்கினேன்.”

“என் வாழ்க்கையிலும் தொழிலிலும் அன்னை - ஸ்ரீ அரவிந்தர் கருத்துகளைப் பக்தி சிரத்தையோடு கடைப்பிடித்து வந்தேன். அன்னையை நினைத்துக்கொண்டு வியாபாரம் செய்வதற்கும் மற்றவர்களைப்போல வியாபாரம் செய்வதற்கும் பெரும் வேறுபாடு இருப்பதை அனுபவத்தின் மூலம் உணர்ந்தேன். ஆகவே அன்னையை அனைவரது நெஞ்சிலும் இருத்தி வியாபாரத்தைச் செய்து வந்தேன். இரண்டு ஆண்டுகளில் என்னுடைய வியாபாரம் 50 சதவிகிதம் உயர்ந்தது. மூன்றாம் வருடத்தில் அது 100 சதவிகிதமாகவும், நான்காம் வருடத்தில் 175 சதவிகிதமாகவும் பெருகி விட்டது. சொந்த வியாபாரத்தைத் தொடங்கிய இரண்டாம் ஆண்டில், என் இடுப்பை ஒட்டிய முதுகுப்புறத்தில் திடீரென்று ஒரு வலி ஏற்பட்டு என்னை

வாட்ட ஆரம்பித்து விட்டது. அப்பொழுது என் ஆரோக்கியம் மிக நன்றாகவே இருந்தது. பிறகு எப்படி வந்தது இந்த வலி? புரியவில்லை. தொழில் காரணமாக மிக அதிக நேரம் வாகனத்தை ஓட்டியாக வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு. அதனால் வலி அதிகமாகி, நான் பெருந்துன்பத்தை அனுபவித்தேன். ஆயிரக்கணக்கில் பணத்தைச் செலவிட்டு மருத்துவம் செய்து பார்த்தேன். ஆயினும் வலி கூடியதே தவிரக் குறையவில்லை. அதுவரை முதுகுப்புறத்தில் மட்டுமே இருந்த வலி, வலப்புற இடுப்பிலும், வலக் காலிலும் பரவி என்னைச் சித்திரவதைப்படுத்தியது.

பகலில் இயல்பாக என்னால் செயலாற்ற முடியவில்லை. இரவிலும் என்னால் உறங்க முடியவில்லை. அதன் பிரதிபலிப்பு என் தொழிலில் தெரிந்தது. விளைச்சலாய்ப் பெருகி வந்த என் வியாபாரம், விபரீதமான இழப்பை நோக்கி நலிந்து கொண்டிருந்தது. எனக்கு வாழ்க்கையில் சோர்வும், வெறுப்பும் ஏற்பட்டு விட்டன.

இந்த நிலையில் எனக்கு அறிமுகமான அன்னையின் பக்தர் ஒருவர் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு வந்திருந்தார். அவர் வந்தது, ஆகஸ்ட் மாதம். அச்சமயம் என்னைச் சந்தித்த அவர், “ஓர் இந்திய நிறுவனம், ஓர் அமெரிக்க நிறுவனத்தோடு வணிக ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள இருக்கிறது. இந்திய நிறுவனத்தின் சார்பில் யாரேனும் ஓர் அமெரிக்கர் அந்த அமெரிக்க நிறுவனத்தில் சிறிது பயிற்சி பெற வேண்டும். பயிற்சி முடிந்தவுடன் அந்த அமெரிக்கர் இந்தியாவுக்கு வந்து அங்குள்ள நிறுவனத்தில் பணியாற்ற வேண்டும். நீங்கள் ஏன் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது” என்று கேட்டார்.

“மந்தமாகிக் கொண்டு வரும் சொந்தத் தொழிலை விட்டால் தவிர புதிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. அது என் எதிர்காலத்தைச் சிறப்பாக அமைக்குமா? வருவாயைப் பெருக்குமா?” என்ற கேள்விகள் அலைகள்போல் என்னுள் எழுந்தன. சற்று நேரச் சிந்தனைக்குப் பின்பு அந்த அலைகள்



ஓய்ந்தன. தேடி வரும் புதிய வாய்ப்பு லாபகரமாக அமையும். அது மட்டுமன்று; இந்தியாவில் உள்ள அன்னையின் அன்பர்களைப் பற்றிக் கடந்த ஏழெட்டு வருடங்களாக நிறையக் கேள்விப்பட்டு வருகிறேன். இந்த வாய்ப்பை ஏற்றுக் கொள்வதன் மூலம் அந்த அன்பர்களை எல்லாம் நேரில் கண்டு அளவளாவி மகிழலாம். அதோடு, மறைமுகமான ஓர் எதிரியைப் போல எக்காலமும் என்னை வாட்டி வதைக்கும் முதுகு வலிக்கு (கடவுளே! வலி முதுகில் மட்டுந்தானா? வலப்புற இடுப்பில்; வலக்காலில்) இந்திய மருத்துவர்களிடம் சிகிச்சை செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்தேன். என் நண்பரிடம் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக வாக்களித்தேன்.

நான் ஏற்றுக்கொண்ட அந்தப் பொறுப்பின் காரணமாக 1984, பிப்ரவரி, 22ஆம் தேதி அன்று சென்னைக்கு வந்து சேர்ந்தேன். சென்னையில் என் நண்பர் வீட்டில் நான் ஐந்து நாட்கள் தங்கினேன். பிப்ரவரி 28ஆம் தேதி நானும், நண்பரும் புதுவைக்குப் புறப்பட்டுச் சென்றோம். மறுநாள் (பிப்ரவரி 29ஆம் தேதி) சத்திய ஜீவிய தினம் என்பதைக் கேட்டவுடன் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

29ஆம் தேதியன்று விடியற்காலையில் அன்னை தியான மையம் சென்று வழிபட்டேன். மறுநாள் சென்னைக்குத் திரும்பினேன். அதற்குப் பிறகு சென்னையில் நான்கு மாதங்கள் கழிந்து விட்டன. இதற்கு நடுவில் “சென்னையில் யாரேனும் மருத்துவ நிபுணர்கள் இருக்கிறார்களா?” என்று பலரிடமும் நான் விசாரித்தேன். அத்தகைய மருத்துவ நிபுணர்கள் யாரும் சென்னையில் இல்லை என்ற பதில்தான் எல்லாரிடமிருந்தும் கிடைத்தது.

நான் சென்னையில் உள்ள அன்பர் மூலமாகப் புதுவையில் உள்ள வேறோர் அன்பரிடம் “என்னுடைய வலி குணமாக ஏதேனும் வழி உண்டா?” என்று கேட்டு அனுப்பி இருந்தேன். அதற்கு அந்தப் புதுவை அன்பர், அன்னையை எப்படிப் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று கூறியனுப்பினார்.

அவர் யோசனையை ஏற்று நான் ஒவ்வொரு நாளும் தியான மையத்திற்குச் சென்று நீண்ட நேரம் அமைதியாக அமர்ந்து இருந்தேன். அப்பொழுது என் உடலில் எந்த இடத்தில் வலி மையப்பட்டு இருந்ததோ, அந்த இடத்தில் அன்னையின் திருவுருவைக் கற்பனையால் தோன்றுமாறு செய்வேன்.

அன்னையின் அருள் ஒளி அங்கெல்லாம் பாய்ந்து பரவுவது போலவும், வலியிலிருந்து நான் முழுமையாக விடுதலை பெற்று விட்டது போலவும் உணர்வதாக எண்ணிக் கொள்வேன். அதோடு கூட, என்னை வதைக்கும் வலி எந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டது என்பதையும், அது சம்பந்தப்பட்ட மற்றவர்களின் தொடர்புகளையும் நினைவு கூர்ந்து அவற்றை அன்னையிடம் சமர்ப்பிப்பேன்.

அதன் காரணமாக அந்த வலி என்னிடத்தில் தோன்றிய சமயத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி எனக்கு ஞாபகம் வந்தது. அப்போது நான் ஒரு நபரை அடிக்கடி சந்திக்க நேர்ந்தது. என் மீது அவருக்கு அளவில்லாத கோபமும், பொறாமையும் இருந்தன. அவர் என்னைச் சந்திக்கும்போதெல்லாம் என் மீது இந்த இரண்டையும் அளவில்லாமல் வாரிக் கொட்டுவார். அப்பொழுது எனக்குக்கூட, 'அவர் காட்டுகிற கோபமும், பொறாமையும் நியாயமானவையே!' என்று தோன்றும். உண்மையில் அவர் என் மீது கோபமும், பொறாமையும் கொள்ள எந்த ஒரு நியாயமும் இல்லை. என்றாலும், இந்தச் சந்திப்பின் போது, 'அவர் காட்டுகிற கோபமும், பொறாமையும் நியாய-மானவையே!' என்று எனக்குத் தோன்றுகின்ற எண்ணத்தை என்னால் தவிர்க்க முடியவில்லை.

நினைவு கூர்ந்தபோது இந்த எண்ணம்தான் என்னிடத்தில் வலி ஏற்படத் தூண்டுகோலாக அமைந்தது என்பது புரிந்தது. மேலும் ஒரு நிகழ்ச்சி என் நினைவில் வந்து நின்றது. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் என் மோட்டார் சைக்கிள் விபத்துக்கு உள்ளாகியது. அதனால் என் முதுகெலும்பு சிறிது இடம் பிறழ்ந்து விட்டது. மருத்துவச் சிகிச்சைக்குப் பிறகு அது



சரியாகி விட்டதைப்போல் தோன்றியது. ஆனால் அது சரியாக-வில்லை; சதியாகி இருக்கிறது. ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு, அது என் மீது கடுமையான தாக்குதலைத் தொடங்கி இருக்கிறது. ஆக ஒரு கோபக்கார, பொறாமை பிடித்த மனிதரின் பொல்லாத உணர்வுகளை நியாயம் என எண்ணிய என் நினைவு, ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட என் மோட்டார் சைக்கிள் விபத்து ஆகிய இரண்டுமே என்னுடைய வலிக்குக் காரணங்கள் எனப் புரிந்தது.

இந்த விவரங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக அன்னையிடம் சமர்ப்பித்து வந்தேன். இதன் மூலம் என்னுடைய வலி சிறிது சிறிதாகக் குறைவதை உணர்ந்தேன். இமைப் பொழுதும் நீங்காது என்னை இம்சிக்கும் அந்த வலி, ஒருநாள் இரவு 8 மணியளவில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் விட்டது. நீங்காத வலி நீங்கிய பொழுது, எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. தடைகள் எல்லாம் நீங்கிய நிலையில் சுதந்திரமாக வானவீதியில் பறப்பது போன்ற ஒரு பரவச உந்தல். மூன்று மணி நேரம் நீங்கிய வலி முற்றும் நிரந்தரமாக நீங்குவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்ற நம்பிக்கை என்னுள் பிறந்து விட்டது.

அந்த அமெரிக்க அன்பரின் குறிப்பு, அன்னையின் அனைத்து அன்பர்களுக்கும் பொதுவானது. அன்னையின் அருளைப் பெறுவதற்கு நம்பிக்கை முக்கியம். இப்பொழுது நாம் எந்த ஒரு துன்பத்தை அனுபவித்தாலும், அதற்கான விதைகளை ஏதோ ஒரு காலத்தில் நாம்தாம் விதைத்திருப்போம். அந்தத் துன்ப விதைகள் முளைக்கக் காரணமாக இருந்த நம் எண்ணங்களையும், செயல்களையும் நினைவு கூர்ந்து, அவற்றை முற்றிலும் களைந்தெறிய வேண்டும். அன்னையின் அருள் விரைந்து செயல்பட, மாசு படிந்த சிந்தனைகளையும் செயல்களையும் போக்கிக் கொள்ள வேண்டியது மிக மிக முக்கியம்.

★★★

## வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

**6. இடையறா முன்னேற்றத்தை வாழ்க்கையினுடைய குறிக்கோளாக ஏற்றுக்கொள்ள வேண்டும். கிடைத்த முன்னேற்றம் போதும் என்ற எண்ணம் வரவே கூடாது. ஓய்வெடுத்துக் கொள்ளலாம் என்று விரும்பவும் கூடாது.**

சைத்தியக் கல்வி என்று அன்னை எழுதிய 10 சட்டங்களில் இது 6-ஆவது சட்டம். பூரண யோகத்திற்கு அடிப்படையான சட்டம் எனவும் கூறலாம். இந்தச் சட்டப்படி பிரபஞ்சம் இயங்குகிறது. மனித உடல், ஜீவராசிகள் இந்தச் சட்டப்படியே இயங்குவது உண்மையானால், அது கண்ணுக்குத் தெரிவ-தில்லை. மனம் விழிப்பானால் அறியும். பிறந்த குழந்தை விடும் மூச்சு, கடைசிவரை இடைவிடாதுள்ளது. குழந்தை வளர்ந்தாலும், 25 வயதிற்குமேல் உயரம் வளர்வதில்லை. மரம், செடி, கொடிகளும் அப்படியே, ஆனால் வளர்ச்சி நிற்பதில்லை. உயரத்தில் மாற்றம் தெரியாவிட்டாலும், உணர்ச்சி வளரும், உள்ளுறை ஜீவியம் வளரும், மனம் வளரும், ஞானம் வளரும், ஆத்மா வளரும், பரிணாம வளர்ச்சிபெறும், தாழ்ந்த பகுதியான உடல் வளர்வதை நிறுத்திவிட்டால், உயர்ந்த பகுதிகள் தொடர்ந்து உயர்ந்த அளவில் வளரும். நமது முன்னேற்றம் இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டால், பிரபஞ்சம்போல் தொடர்ந்து வளரும். ஒரு குடும்ப முன்னேற்றம் தடையின்றி, முடிவின்றி வளர்ந்தால் வெகு சீக்கிரம் அது ஊரில் முதல் குடும்பமாகும். அதையே தொடர்ந்தால் மாவட்டத்திலும், மாநிலத்திலும், நாட்டிலும், உலகிலும் முதன்மையான குடும்பமாகும். Bill Gates-இன் பணம் இதுபோல் வளர்ந்தது. பண வளர்ச்சிக்கு முடிவில்லை. முடிவு வந்தாலும் தொடர்ந்த மன வளர்ச்சி, பண்பின் வளர்ச்சி, ஆத்ம வளர்ச்சியெனத் தொடரும். வளர்ச்சியின் தரம் தொடர்ந்து மாறினால் வளர்ச்சிக்கு முடிவில்லை. நாட்டின் பெரிய தலைவர்கள் வாழ்வைக் கவனித்தால் இந்த உண்மை விளங்கும்.



மனிதனை சோம்பேறி என்கிறார் அன்னை. பகவான் 100 பேருக்கு யோகம் பலித்தால் சத்திய ஜீவியம் வரும் என்றார். குறைந்தபட்சம் 12 பேராவது வேண்டும் என்றார். அப்படிக் கூறியவர் தம்மை நாடி வந்த சாதகர்களின் யோகத்தை வழி நடத்தும் பொறுப்பை நேரடியாகத் தானே மேற்கொண்டார். அதை நிர்வாகம் செய்ய சாதகர்கட்கு வேலைகளை பொறுப்-பாகக் கொடுத்தார். அவ்வேலைகளை நேரடியாக நிர்வாகம் செய்யும் பொறுப்பை அன்னையிடம் ஒப்படைத்தார். சாதகர் குழந்தைகட்குக் கல்வி புகட்டும் கடமையை ஆசிரமப் பள்ளி ஏற்றது. வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் அன்னையே அளித்தார். சாதகர்களுடைய யோகானுபவங்களை நேரடியாகத் தனக்கே எழுதச் சொன்னார். பதில் எழுதினார். 20,000 கடிதங்கள் எழுதினார். அது எப்படிப்பட்ட உதவி, ஸ்தாபனம், சூழல் என்று அறிய ஆசிரமத்திற்கு வெளியேயிருந்து யோகம் பயில்பவர் அறிவார்.

யோகத்தில் முதற்கட்டம் மௌனம், நாள்கணக்காக, வருஷக்கணக்காகப் பயின்றாலும் கிடைக்காது. பால்கனி தரிசனத்தில் முதல்நாள் பூரண மௌனம் கிடைக்கும். சமாதியில் உட்கார்ந்தால் 10 அல்லது 20 நிமிஷத்தில் கிடைக்கும். ஆசிரமச் சூழலில், அன்னையின் பார்வையில், பகவான் நேரடியாகத் தந்த உதவியால் வருஷம் நாளாகும், ஜென்மம் சில மாதமாகும். ஒரு கட்டம் பலித்தால் அதை நிரந்தரமாகப் பெற நம் வாழ்வு முறையை அன்னை முறையாக்கிக் கொள்ள வேண்டும். அது எவராலும் இதுவரை இயலவில்லை என்பது அன்னை அனுபவம். அம்பானி வளர்ந்ததைப் போன்ற வளர்ச்சியே ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான இளைஞர்கள் பெறுவது, எவரும் தொடர்ந்து வளர்வதில்லை. ஏனெனில் வளர்ச்சி வரும் பொழுது ஆயிரம் கிளைப் பாதைகளுண்டு. பணத்திற்குப் பல்லாயிரம் செலவு வரும். 50,000 கோடி சம்பாதிப்பவன்,

50 கோடியில் நின்றுவிடுகிறான். 5 கோடியிலேயே நிற்பவர்கள் ஏராளம். வளரும் பொழுது தெம்பு அதிகரிக்கும். தெம்பு திறமையானால் தொடர்ந்த வளர்ச்சியுண்டு. அதற்கு முதலில் கட்டுப்பாடு தேவை. திறமை தொடர்ந்து வளர பண்பு தேவை. பண்பு உயர அந்நிலைக்குரிய skills, attitudes, திறமைகள், நோக்கங்கள் தேவை. இவற்றைப் பெற விரும்பாதவர், முடியாதவரைவிட அதிகம்.

தொடர்ந்த முன்னேற்றம் பெற தொடர்ந்து உயரும் அடுத்த கட்ட முயற்சி தேவை. முயற்சி செய்ய மனிதன் விரும்புவதில்லை. பெற்றதை அனுபவிக்க விரும்புவான். அனுபவித்து அழிக்க விரும்புவான். சேகரம் செய்து கொண்டே போனால் எப்பொழுதுதான் அனுபவிப்பது என்பான். அனுபவிக்கும் ஆசை வந்ததும், வளர்ச்சி நின்று போகும். சம்பாதிப்பவனுக்கு வீடு கட்ட, திருமணம் செய்ய, வெளிநாடு செல்ல அளவு கடந்து ஆர்வம் பெருகி, அவையே தடையாகும். வளர்ச்சிக்குரிய மனப்பான்மை இடையறாத வளர்ச்சி. மற்ற விஷயங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்வரை பொருந்தும். எதிராக இருப்பதே இயல்பு. வளர்ச்சியை நிறுத்தி, அனுபவிப்பதை வளர்த்தால் 10 அல்லது 20 ஆண்டுகள் வளர்ச்சியில் பெற்றது ஓராண்டில் விரயமாகும். அதன்பின் வளர்ச்சிக்கே மனம் போகாது.

பூரண யோகத்தில் எதுவும் கூடிவரும். எந்த அளவிலும் கூடிவரும். தொடர்ந்தும் கூடிவரும். பணத்தில் ஏற்படும் தளர்ச்சி யோகத்தில் பலமடங்கு ஏற்படும். அன்னையின் காலடியில் யோகம் செய்வது கல்லூரியில் பயில்வது, நாமே யோகம் செய்வது தபாலில் படிப்பதுபோல். இன்று தபால் வழி படிப்புண்டு. அன்று அது இல்லை. புத்தகமில்லாமல், ஒருவர் உதவியில்லாமல், நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு, தானே பட்டம் பெற ஆயிரத்திலொருவரால் அன்று முடிந்தது. யோகம் வெளியில் வாழ்பவருக்குண்டு என்பது சட்டமானாலும், நடைமுறையில் அது மிகமிகச் சிரமம். அதுவும் அன்னையை மனதில் யோகத்தில் பிரதிஷ்டை செய்தால் கூடிவரும். கூடிவரும் பொழுது அதைத் தொடர மனித மனம் இடம்



தராது. யோகம் கூடிவருவதைவிட கூடி வந்ததைத் தொடரும் மனப்பான்மையை மேற்கொள்வது கடினம். அது அளவு கடந்து திட்டிய எலிசபெத்தை அன்போடு அணுகிய டார்சியின் மனப்பான்மைக்குத்தான் முடியும்.

முற்றும்

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிறரை அவர் தன்னையறியும் வகையில், அவர் விரும்பிப் போற்றும் வகையில், நம்மால் புரிந்து கொள்ள முடியுமானால், அவர் குறைகளை அவர் புறக்கணிப்பதுபோல் நாமும் புறக்கணித்தால், அவர் நிறைவுகளை அவர் போற்றுவதுபோல் நாமும் போற்றினால், அவர் நம்மை உணர்ச்சியுடன் சேர்த்துக் கொள்வார். உணர்ச்சி ஒன்றினால் நல்லது நடக்கும்.

- நல்லது நடக்க, பிறரை அவர் அறிவதுபோல் அறிய வேண்டும்.
- அனைவரையும் அவரவர் கண்ணோட்டத்தில் புரிந்துகொண்டால், அனைவராலும் நமக்கு நல்லதுண்டு.
- நம்மால் அனைவருக்கும் நல்லது செய்ய முடியும்.
- அவரவர் விரும்பி ஏற்பதே அனைவருக்கும் நல்லது.
- பிறர் விருப்பத்தை ஏற்பது பிறரை ஏற்பதாகும்.
- எவரை ஏற்றாலும் நல்லது நடக்கும்.
- நடப்பனவெல்லாம் நல்லனவாக நடக்க, பழகுபவர் எல்லோரையும் ஏற்கும் மனம் வேண்டும்.
- பெரிய மனம் அதிகமான பேரை ஏற்கும், அதனால் அதிகமான பேருக்கு நல்லது செய்ய முடியும், அதிகமான பேர் நல்லது செய்வார்கள்.

**உலகம் உய்ய அனைவரையும் நல்லவர் என அறிந்து மனம் ஏற்பது அவசியம்.**

# திருடு போன Electric Drill மீண்டும் கிடைத்த விதம்

என். அசோகன்

என்னிடம் சுவரில் துளை போடக் கூடிய **Electric Drill** ஒன்று இருந்தது. வருடம் 2000 ஏப்ரல் மாதம் நான் அமெரிக்காவிற்குச் சென்றுவிட்டு திரும்பும் வழியில் ஐரோப்பாவில் உள்ள ஹாலந்து நாட்டில் பத்து நாட்கள் தங்கி இருந்தேன். அச்சமயம் செய்த ஷாப்பிங்கில் இந்த **drill**-ஐயும் வாங்கி இருந்தேன். வெளிநாட்டிலிருந்து வாங்கி வந்ததால் மிகவும் பத்திரமாக வைத்து இருந்தேன். என்னிடம் வீடு மற்றும் எங்களுடைய ஸ்தாபனம் சம்பந்தப்பட்ட இடங்களில் எல்லாம் நடக்கின்ற மின் வேலைகளுக்கு இந்த **drill** மிகவும் உதவியாக இருந்தது.

இந்த மின் வேலைகளைச் செய்யும் வகையில் எனக்குப் பழக்கமான **Electrician** ஜூலை 18-ம் தேதி மாலை என்னை வந்து அணுகி நாங்கள் நடத்தும் பள்ளியில் செய்ய வேண்டிய மின் வேலைக்காக **drill** தேவைப்படுகிறது என்று கேட்டார். பள்ளியில் எங்கே வேலை என்று விசாரித்தபோது எங்கள் பள்ளியின் விரிவாக்கப் பணிகளை ஏற்றுச் செய்து கொண்டு இருக்கின்ற சிவில் இன்ஜினீயரான ஒரு அன்னை அன்பர் தங்கி இருக்கின்ற அறையில் ஒரு மின் **outlet**-ஐ மூடும் வேலை என்றார். இதற்கு சம்மதித்து என்னுடைய **drill**-ஐ வழங்கினேன். இரண்டு மணிநேரம் கழித்துத் திரும்பி வந்தவர் மிகவும் பதற்றத்துடன் காணப்பட்டார். வேலை முடித்து விட்டீர்களா என்று கேட்டபொழுது "**Drill** திருடு போய்விட்டது இரண்டு மணிநேரமாக அதைத்தான் தேடிக்கொண்டு இருக்கிறேன்" என்றார். இதைக் கேட்டபொழுது எனக்கு பெரிய அதிர்ச்சியாக இருந்தது. பிறகு சமாளித்துக் கொண்டு "எப்படித் திருடு போனது என்று கேட்டேன்."

அதற்கு அவர் பின்வருமாறு பதில் அளித்தார். என்னிடம் **drill**-ஐ வாங்கிக் கொண்டு பள்ளிக்குச் சென்றதாகவும் வெளி கேட்டை திறப்பதற்காக கையில் வைத்திருந்த **drill**-ஐ அந்த



கேட்டில் வெளிப்பக்கமாக சாத்தி இருந்த ஒரு சைக்கிளின் கேரியரின் மேல் வைத்துவிட்டு பின்னர் கேட்டைத் திறந்ததாகச் சொன்னார். அந்த ஏரியாவில் உள்ள யாருடைய வீட்டிலோ கேபிள் டி.வி. சரியாகத் தெரியவில்லை என்ற புகாரைச் சரி செய்வதற்காக உள்ளூர் கேபிள் டி.வி. கம்பெனியைச் சேர்ந்த மூன்று டெக்னீஷியன்கள் அங்கு வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவரின் சைக்கிள்தான் அது. அருகில் இருந்த ஏதோ ஒரு வீட்டிற்குச் சென்றவர்கள் இவர் எங்கள் பள்ளியின் கேட்டை திறக்கும்போதே பின்னால் வந்து விட்டார்கள். இவர் கதவைத் திறந்ததும் அவர்களும் உள்ளே நுழைந்தார்களாம். பள்ளிக்குள் என்ன வேலை என்று கேட்டபோது "இந்த ஏரியாவிற்கு உண்டான ஜங்ஷன் பாக்ஸ் இந்த பள்ளியின் மாடியில்தான் இருக்கிறது. அதைச் சரி செய்வதற்காகத்தான் மேலே போக விரும்புகிறோம்" என்றார்களாம்.

கேட்டைத் திறந்தவர் **drill**-ஐ சைக்கிள் கேரியரில் வைத்ததையே மறந்துவிட்டு முதல் மாடியிலுள்ள இன்ஜினியரின் அறைக்குச் சென்றுவிட்டார். வந்த டெக்னீஷியன்களும் மொட்டை மாடிக்குச் சென்றார்கள். இன்ஜினியர் அறையில் இரண்டு வேலைகள் இருந்தன. ஒன்று ஜன்னலில் உள்ள ஓட்டையை மூடுவது. இரண்டாவது அறையில் ஸீலிங்கில் உள்ள **outlet**-ஐ மூடுவது. முதல் கால் மணிநேரத்தை ஜன்னல் ஓட்டையைச் சரி செய்வதில் செலவிட்டாராம். அடுத்த கட்டமாக சீலிங் வேலையை ஆரம்பிக்க வேண்டும் என்ற பொழுதுதான் என்னுடைய **drill**-ஐ வெளியே சைக்கிளில் விட்டுவிட்டு வந்தது நினைவிற்கு வந்ததாம். பதறியடித்துக் கொண்டு வெளியில் ஓடிவந்து பார்த்தபோது அங்கே அந்த சைக்கிளும் இல்லை என்னுடைய **drill**-ம் இல்லை. ஜங்ஷன் பாக்சை சரி செய்ய வந்த கேபிள் டி.வி.காரர்கள் திரும்பிச் சென்று விட்டிருந்தார்கள். அவர்கள்தாம் எடுத்திருக்க வேண்டும் என்று சந்தேகப்பட்டவர் இன்ஜினீயரை அழைத்துக்கொண்டு கேபிள் டி.வி. அலுவலகத்திற்குச் சென்று பார்த்த பொழுது வந்திருந்த மூவரில் இருவர் கிடைத்தார்கள். அவர்களிடம் இவர்கள் விசாரித்த

பொழுது “உங்கள் **drill**-ஐ பற்றி எங்களுக்கு ஒன்றுமே தெரியாது. நாங்கள் ஒரு வேலையாக அங்கு வந்தோம். அந்த வேலை முடிந்தவுடன் திரும்பிவிட்டோம். எங்கள் சைக்கிள் கேரியர்மேல் வைத்ததாகச் சொல்கிறீர்கள், தெருவில் நிற்கும் சைக்கிள்மேல் வைத்த பொருளை அந்த வழியாக வந்த எவரும் எடுத்து இருக்கலாம். எங்கள் சைக்கிள் என்பதால் எங்கள்மேல் சந்தேகப் படுவது சரியில்லை. நாங்கள் மீண்டும் சைக்கிள் எடுக்கும்போது அதன்மேல் **drill** இல்லை” என்று அடித்துப் பேசினார்களாம். உங்களுடன் வந்த மூன்றாம் நபர் எங்கே என்று கேட்டபொழுது அவருடைய வீட்டு முகவரி எல்லாம் எங்களுக்குத் தெரியாது என்றும் சொல்லிவிட்டார்களாம்.

இதைச் சொல்லி முடித்தவர் மேற்கொண்டு என்ன செய்வது என்று என்னையே கேட்டார். இந்த மூன்றாம் நபரைத் தேடிப் பிடித்து அவரையும் விசாரிக்க வேண்டும் என்று நான் முடிவு செய்து, இப்பொழுது மூவருமாக அதே இடத்திற்குச் சென்றோம். மீண்டும் அந்த இருவரையும் சந்தித்து பிரஷர் கொடுத்தபொழுது அந்த மூன்றாம் நபர் இன்னொரு கேபிள் டி.வி. அலுவலகத்தில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். உடனே அங்குக் கிளம்பிச் சென்றோம். முகவரியே தெரியாது என்று சொன்னவர்கள் பின்னர் அந்த மூன்றாம் நபர் இருக்கும் இடத்தைச் சொன்னது என் இன்ஜினீயர் நண்பருக்குச் சந்தேகத்தை உறுதிப்படுத்தியது. ஆனால் அந்த மூன்றாம் நபரைச் சந்தித்தபோது மற்ற இருவர் சொன்ன அதே பதிலைத்தான் இவரும் சொன்னார். இவரிடம் பேசி உண்மையை வரவழைக்க முடியாது என்று புரிந்து கொண்ட நான் “போலீசில் கம்ப்ளைண்ட் கொடுக்கப் போகிறோம், விசாரணைக்குத் தயாராக இருங்கள்” என்று சொல்லிவிட்டு மூவருமாகத் திரும்பி வந்தோம்.

வீட்டிற்கு வந்ததும் என் தகப்பனாரிடம் சென்று எலக்ட்ரிஷியனின் கவனக்குறைவால் **drill** திருடு போனதைச் சொன்னேன். அதற்கு அவர் அது திரும்பக் கிடைக்கும் பயப்பட வேண்டாம் என்று பதில் சொன்னார். நான் அதை மிகவும் பத்திரமாக வைத்திருந்ததால் அது என்னைவிட்டு



நிரந்தரமாகப் போகவே போகாது என்றார். போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுப்பதற்கு நான் தயாராக இருந்தாலும் எலக்ட்ரிஷியன் முன்வரவில்லை.

இதை என் தகப்பனாரிடம் சொன்ன பொழுது, **drill**-ஐ திரும்பப் பெறுவதற்கு நான் செய்யக்கூடியது ஒன்று இருக்கிறது என்றார். “அது என்ன?” என்று கேட்ட பொழுது **drill** திருடு போனது ஒரு லைப் ரெஸ்பான்ஸ் நிகழ்ச்சியாக இருக்கலாம் என்றும், **drill** திருடு போன அதே சமயத்தில் அல்லது ஒரு நாள் முன்னதாக எங்கள் வீட்டில் உள்ள எவரேனும் அடுத்தவருடைய பொருளை அபகரித்துக் கொண்டு வந்திருக்கலாம், மேலும், அடுத்தவர் பொருள் எங்கள் வீட்டிற்குள் முறைதவறி வரும் பொழுது எங்கள் வீட்டுப் பொருள் அதேவிதமாக வெளியில் சென்றுவிட்டது என்று எடுத்துக் கொள்ளலாம் என்றும் கூறினார்.

எனக்குத் தெரிந்து கடந்த சில தினங்களாக எங்கள் வீட்டைச் சேர்ந்த எவரும் இத்தகைய தவற்றைச் செய்யவில்லை என்றேன். அவர் விடாமல் கடந்த சில தினங்களாக யார் யார் வீட்டிற்கு வந்தார்கள் என்னென்ன கொண்டு வந்தார்கள் என்று விசாரித்தார். அதற்கு நான் 16-ம் தேதி கனடாவிலிருந்து ஒரு நண்பர் வந்தார் என்றும் என் குழந்தைக்கும், மற்றும் என் சகோதரர்களின் குழந்தைகளுக்கும் துணிமணிகளும், விளையாட்டுப் பொருட்களும் வாங்கி வந்தார் என்று தெரிவித்தேன்.

என்னுடைய குழந்தைக்காகக் கொடுக்கப்பட்ட பரிசுப் பொருட்களை எடுத்து வரும்படி சொன்னார். அவை எல்லாவற்றையும் பார்வையிட்ட என் தகப்பனார் இப்பொழுது கொண்டு வந்தவை எல்லாம் என் குழந்தைக்காகத் தரப்பட்டவையா? என்று கேட்டார். அதில் உண்மை என்ன வென்றால் பொம்மை கார் ஒன்று என் குழந்தைக்காகத் தரப்பட்டது இல்லை, என் இரண்டாவது தம்பியின் முதல் மகனுக்குத் தரப்பட்டது. இந்தப் பொம்மை காரை பார்த்த பொழுது என் மனைவியும், என் தாயாரும் என் தம்பி பையனிடம் ஏற்கனவே நிறைய பொம்மை கார்கள் இருப்பதால் இதை அவனுக்குத்

தராமல் என் குழந்தைக்காக இங்கேயே வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தார்களாம். அடுத்த கட்டமாக என் தாயார் என் தம்பி மனைவியிடம் இதைத் தெரிவித்தபொழுது அவர்களும் சந்தோஷமாக விட்டுக் கொடுத்தார்களாம். ஆக இவ்வழியில்தான் இந்த பொம்மை கார் இந்த வீட்டிலேயே தங்கிவிட்டது என்பதை அவருக்குத் தெரிவித்தோம்.

இதைக் கேட்டவுடன் என் தகப்பனார், **drill** திருடு போனதில் ஒரு **life response** தொடர்பு இருக்கிறது என்றும், என் தம்பியின் பிள்ளைக்கு வந்த கார் பொம்மையை என் தாயாரும், மனைவியும் தக்க வைத்துக் கொண்டது என் **drill** திருடு போவதற்கு நேரடிக் காரணம் என்றும் கூறினார். ஆனால் அதை என்னால் அந்த நேரம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. என் தகப்பனாரோ இரண்டுமே ஒரே தரப்பட்ட நிகழ்ச்சிகள்தாம் என்று வலி-யுறுத்தினார். மேலும் ஒரு இடத்தினுடைய சூழல் உயர்வாகவும், சென்சிடிவாகவும் இருக்கும்பொழுது சிறு தவறுகள் கூட பெரிய வேண்டாத விளைவுகளை உண்டு பண்ணும் என்றும் கூறினார்.

அடுத்த நாள் போலீஸ் ஸ்டேஷனில் **drill** என்னுடையது என்றும் தொலைத்தவர் எலக்ட்ரீஷியன் என்றும் ஸ்டேட்-மெண்டில் குறிப்பிட்டு கம்ப்ளைண்ட் கொடுத்தோம். மறுநாளே அதாவது ஜூலை 21-ஆம் தேதி ஸ்டேஷனுக்கு எலக்ட்-ரீஷியனை வரும்படி அழைத்தார்கள். 18-ஆம் தேதி தொலைத்த **drill** விஷயமாக ஏன் இன்றுவரை கம்ப்ளைண்ட் கொடுக்காமல் இருக்கிறார் என்று கேட்டார். கேபிள் டி.வி. கம்பெனியைச் சேர்ந்தவர்கள்மேல் சந்தேகம் என்று ஸ்டேட்மெண்ட் கொடுத்-தால் அவர்களுடன் தகராறு என்ற பயம்தான் காரணம் என்று அவர் அளித்த பதில் போலீசாருக்குத் திருப்தி அளிக்கவில்லை. கம்ப்ளைண்ட் கொடுக்க முன்வரவில்லை என்றால் போலீசாரின் சந்தேகம் அவர் பேரிலேயே திரும்பும் என்று அவர்கள் எச்சரிக்கை விடுத்தார்கள்.

இப்படி ஒரு எச்சரிக்கை வந்த பிறகு **drill**-ஐ எப்படியாவது மீட்க வேண்டிய பிரஷர் அவருக்கு மேலும் அதிகரித்தது. சனி,



ஞாயிறு, திங்கள் மூன்று நாட்களிலும் என்னைச் சந்திப்பதையே தவிர்த்தார்.

என் தகப்பனாருடைய கட்டளையை ஏற்று என் மனைவி என் சகோதரனின் மனைவியை அழைத்து, அவர்கள் குழந்தைக்காக வந்த கார் பொம்மையை எடுத்துப் போகும்படி கூறினாள். அவர்கள் இங்கு வந்து அந்தக் கார் பொம்மையை எடுத்துச் சென்றார்கள். இது ஜூலை 20-ஆம் தேதி வெள்ளிக் கிழமை நடந்தது.

இதற்கிடையில் அன்னையின் அருளால் என் **drill** எப்படியும் மீட்கப்படும் என்று திடமாக நம்பிய நான் தொடர்ந்து பிரார்த்தனையும் செய்து கொண்டிருந்தேன்.

ஜூலை 20-ஆம் தேதி அன்று நான் தொலைத்த அதே வெளிநாட்டு **drill**-ஐ புதிதாக இங்கே வாங்க என்ன செலவாகும் என்று விசாரித்தேன். ஆகஸ்ட் ஒன்றாம் தேதி வரையிலும் பழைய **drill** கிடைக்கிறதா என்று பொறுத்திருந்து பார்க்கலாம், அன்றும் கிடைக்கவில்லை என்றால் புதிதாக ஒன்று வாங்குவது என்றும் தீர்மானித்திருந்தேன். அதே மாடல் **drill**-ன் விலை ரூ.2650/- என்று தெரிய வந்தது.

ஜூலை 20-ஆம் தேதி இரவு நான் எலக்ட்ரீஷியனைச் சந்தித்து தொலைந்தது கிடைக்கவில்லை என்றால், புது **drill** வாங்கவேண்டிவரும் என்று சொன்னேன். அதனுடைய விலையில் 1500 ரூபாவையாவது இவர் ஏற்க வேண்டும் என்றும் வலியுறுத்தினேன். இதற்கு மறுப்பு தெரிவிக்காமல் ஒத்துக் கொண்டார்.

இப்படி வாக்குக் கொடுத்திருந்தாலும், அதன் பிறகு தொடர்ந்து மூன்று நாட்கள் அவர் என்னைச் சந்திப்பதை தவிர்த்த போது எனக்குச் சந்தேகம் வரத்தான் செய்தது. 24-ஆம் தேதி காலையில் வீட்டு வாசலில் நின்றுகொண்டு அவர் என்னை கூப்பிடுவது கேட்டது. வெளியே வந்து பார்த்தபோது என்னுடைய **drill**-ஐ கையில் வைத்துக்கொண்டு அவர் நின்று கொண்டிருந்தார். எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.

எப்படி **drill**-ஐ மீட்டீர்கள் என்று நான் கேட்ட போது, அவர் நீண்ட கதை சொன்னார். அதன் சாரம் பின்வருமாறு: என்னுடைய **drill**-ஐத் தொலைத்த விஷயத்தைத் தனக்குத் தெரிந்த ஒரு கடை உரிமையாளரிடம் சொல்லியிருந்தாராம். அந்தக் கடைக்கு வாடிக்கையாக வந்து போய்க் கொண்டிருந்த ஒரு இளைஞர் அந்த கேபிள் டி.வி. கம்பெனியைச் சேர்ந்த டெக்னீஷியர்களுடன் நண்பராக உறவாடிக் கொண்டிருந்தார். கடை உரிமையாளர் இந்த இளைஞரிடம் **drill** தொலைந்து போன விஷயத்தைச் சொல்லிவைத்திருந்தாராம். இவ்விளைஞர் அந்த டெக்னீஷியருடன் பேசிக் கொண்டு இருந்தபோது, அவர்களும் இப்படி ஒரு **drill**-ஐ எடுத்துக் கொண்டு வந்து விட்டதாகவும், அதை விற்பதற்கு ஆள் தேடிக்கொண்டு இருப்பதாகவும் சொன்னாராம். ஏற்கனவே இதைக் கேள்விப்பட்டிருந்த அந்த இளைஞர் உடனடியாக கடை உரிமையாளரிடம் வந்து **drill** இவர்கள் கையில்தான் இருக்கிறது என்று தெரிவித்தார். அவரும் உடனடியாக இந்த டெக்னீஷியர்களைச் சந்தித்து நல்லவிதமாக **drill**-ஐத் திருப்பித்தரும்படி புத்திமதி கூறினாராம். அவர்களுக்கும் ஒரு மனமாற்றம் வந்து இவரிடம் அதைக் கொடுத்து விட்டார்களாம். பின்னர் அவரிடமிருந்து எலக்ட்ரீஷியன் கையில் வந்து இப்பொழுது அவர் என்னிடம் தருவதாகச் சொன்னார்.

இப்படியாக என்னுடைய **drill** என்னிடம் திரும்பி வந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. உடனே அன்னைக்கு நன்றி தெரிவித்தேன். பிறகு என் தகப்பனாரைச் சந்தித்து **drill** திரும்பி வந்த விதத்தைப் பற்றி சொன்னேன். அவரும் மிகவும் சந்தோஷம் அடைந்தார். **Drill** திரும்பக் கிடைத்ததற்கு எலக்ட்ரீஷியன் ஒரு காரணம் சொன்னாலும், பிறர் பொருளை திருப்பிக் கொடுத்ததுதான் உண்மையில் **drill**-ஐ மீட்டுத் தந்தது என்று மீண்டும் வலியுறுத்தினார். அதைத் திருப்பித் தராமல், அதற்கும் **drill** தொலைந்து போனதற்கும் உண்டான தொடர்பை ஏற்காமல் அன்னையிடம் நான் எவ்வளவு தீவிரமாக பிரார்த்தனை செய்திருந்தாலும் அருள் செயல்பட்டிருக்காது. **Drill** திரும்பி வந்திருக்காது என்று விளக்கினார்.



## மனித வாழ்வின் சூட்சுமங்கள்

கர்மயோகி

- மனிதன் குடும்பத்தின் பகுதி. குடும்பம் சமூகத்தின் பகுதி.
- குடும்பம், சமூகம் மனிதன் **skyscraper** போல வளர உதவுகின்றன.
- குடும்பம், சமூகமில்லாவிட்டால் மனிதன் மணல் மேடு போல் உயர்வான்.
- மனித வாழ்வு செயல்களாலானது.
- அச்செயல்கள் புறச் செயல்களுடன் தொடர்புள்ளன.
- அவற்றுள் சில அவனை உயர்த்துவதாகவும், பல அழிப்பதாகவும் அமைந்துள்ளன.
- மனிதன் உணர்வாலானவன்.
- குடும்பத்திலும், சமூகத்திலும் அவன் உணர்வுக்குரியவருண்டு.
- இத்தொடர்புகளில் சில உயர்த்துவதாகவும், பல அழிப்பதாகவும் அமையும்.
- உணர்வைக் கடந்த குணங்களுண்டு.
- பக்தன் மனதில் அன்னை மையமாக வீற்றுள்ளார்.
- அன்னை குணம், சக்தி, ஜீவியத்தாலான சூட்சும உருவம்.
- பக்தனுடைய குணங்கள், வெளியில் குடும்பத்துடனும், சமூகத்துடனும், உள்ளே அன்னையுடனும் தொடர்பு கொண்டுள்ளன.
- அவற்றுள் அழிப்பவற்றை அவன் அறிவான்.
- அத்தனை தொடர்புகளும் அடைக்கப்பட வேண்டியவை.
- அன்னை நம்மை உள்ளே தொடும் இடமெல்லாம் தொடர்புகள்.

- அத்தனை தொடர்புகளும் நம்மை உயர்த்தக் கூடியவை.
- இன்று மனிதனுடைய **maximum** சொஸைட்டியின் உச்சக் கட்டம்.
- சொஸைட்டியின் **maximum** அன்னைக்கு **minimum.**
- அன்னையுடன் குணங்களால் தொடர்பு கொண்டால் சொஸைட்டியின் உச்சிக்குப் போவோம்.
- அன்னையுடன் ஜீவனுள்ள தொடர்பிருந்தால் அன்னை நம்மை தன் **maximum**-க்குக் கொண்டு செல்வார்.
- கடினமான காரியம் நம் குணமாறுதலால் சுலபமாக நடந்தால் அது சொஸைட்டியின் உச்சிக்குப் போக வழியுண்டு எனக் காட்டுகிறது.
- நடக்காதது நடந்தால், அது அன்னையின் சக்தி செயல்படுவதையும், அன்னையின் **maximum**-த்திற்குப் போக வழி ஏற்படுகிறது எனவும் கூறும்.
- நாள் முழுவதும் சிறியது, பெரியதை வெளிப்படுத்தினால், கடினமானவை எளிதாக நடந்தால், நடக்காதது நடந்தால், நடக்கவே முடியாது என்பவை நடந்தால், நாம் தயாராகிறோம் எனப் பொருள்.
- சுமுகம் முதற்படி; **Goodwill** அடுத்தது; இனம் புரியாத சந்தோஷம் அடுத்தது; பிறர் பெறும் நல்லது மனதைப் பூரிக்க வைப்பது முடிவானது.

**சுமுகமாக நம்மை மனிதர்கள் — விரோதிகள் — நாடுவது சரியான Life Response.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பெருமை அகந்தைக்குரியது.
ஆத்ம நிறைவு அனைவருக்கும் உரியது.
ஒரு ஆத்மாவின் சாதனை அனைவர் வாழ்விலும்
அபரிமிதமான பெருமை நிறையும் திருப்தி தரவல்லது.



## உண்மையின் பல்வேறு பரிமாணங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

என். அசோகன்

இங்கே பொய்சாட்சி சொல்ல வெட்கப்படுவதுமில்லை. பொய் வழக்குப் போட்டு வாதாட எந்த வழக்கறிஞரும் தயங்குவதுமில்லை. மேலை நாட்டு நீதி மன்றங்களில் பொய் சாட்சி சொன்னார் என்று தெரிந்தாலே அதற்குத் தண்டனையுண்டு. இங்கே பொய்வழக்கு என்று தெரிந்தால்கூட அதற்கு எந்தத் தண்டனையும் வழங்கப்படுவதில்லை.

ஸ்ரீ கர்மயோகி அவர்கள் மேலை நாட்டவர்களைப்போல நாமும் நாணயமானவர்கள் என்று பெயரெடுத்திருந்தால், நாடு எவ்வளவோ முன்னேறியிருக்கும் என்று சொல்வதுண்டு. இங்கே வாங்கிய கடனைத் திருப்பித் தராமல் இருப்பது மிகவும் சகஜம். விவசாயிகள் வாங்கிய கடனை எல்லாம் திருப்பித் தராமல் போனதால், அரசாங்கம் 65 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குக் கடனைத் தள்ளுபடி செய்யும்படியாயிற்று. இப்படி ஒருமுறை செய்ததால் அடுத்தமுறை கடன் வாங்கும் பொழுதே இக்கடனைத் திருப்பித் தர வேண்டியதில்லை, அரசாங்கம் தள்ளுபடி செய்துவிடும் என்ற நினைப்புடன்தான் விவசாயி கடனையே வாங்குகிறான். ஏதோ ஓரிரு விவசாயிகள் இப்படிச் செய்தால் பரவாயில்லை. விவசாயிகள் முழுவதுமே இப்படித்தான் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நினைவுடன் பயிர் செய்தால் பயிர் எப்படி வளரும். பருவ மழை பொய்த்து விட்டது, காவிரியில் தண்ணீர் இல்லை என்று நாம் வருத்தப் படுகிறோமே தவிர வாங்கிய கடனைத் திருப்பித் தராமல் தட்டிக் கழிக்கலாம் என்ற மனநிலையின் நேரடி விளைவிது என்பதை நாம் அறிவதில்லை. ஜப்பானில் திருடன் வீட்டிற்குள் நுழைந்து பணத்தைத் திருடினால் “நான் வாங்கிய கடனை திருப்பித் தருவதற்காக வைத்துள்ள பணமிது. அதனைத் தொடாதே” என்றால் அவன் அதற்குக் கட்டுப்பட்டு அந்த பணத்தை வைத்துவிட்டுப் போவான் என்று சொல்கிறார்கள். அந்தளவிற்கு நாணயம் ஊறிப்போன கலாச்சாரம் ஜப்பானியக் கலாச்சாரம்.

இப்பொழுதுகூட அரசாங்க இனாம், மற்றும் இலவசங்களை நம்பியிருக்கக் கூடாது. உழைக்காமல் லஞ்சம் வாங்கிப் பிழைக்கக் கூடாது. நியாயமான உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தைத்தான் நம்பி இருக்க வேண்டும் என்று மக்கள் மனப்பான்மையை திருத்திக் கொண்டார்கள் என்றால், நாடு அந்தளவிற்கு வேகமாக முன்னேறும். பிரேஸில் நாட்டில் ஒரு நிறுவனத்தில் மேனேஜ்மெண்ட் ஊழியர்களை வரவழைத்து இந்தக் கம்பெனியில் அவரவர்கட்கு ஏற்ற சம்பளத்தை நிர்ணயித்துக் கொள்கின்ற சுதந்திரத்தை உங்களுக்குக் கொடுக்கிறோம். என்ன சம்பளம் முடிவு செய்துள்ளீர்கள் என்பதை எங்களுக்குத் தெரிவிக்கவும் என்றறிவித்தார்கள். இப்படிச் செய்வது ஒரு ஆபத்தான வேலை. இருந்தாலும் அக்கம்பெனி மேனேஜ்மெண்டிற்குத் தம்முடைய ஊழியர்மேல் ஒரு நம்பிக்கை இருந்தது. அம்மாதிரியே அந்நம்பிக்கை வீண் போகவுமில்லை. யார் யார் என்ன சம்பளம் கேட்பார்கள் என்று மேனேஜ்மெண்ட் எதிர்பார்த்ததோ அந்தச் சம்பளத்தைத்தான் அவர்கள் கேட்டார்கள். மேனேஜ்மெண்ட்டும் அவர்கள் முடிவைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டது. நம் நாட்டில் இப்படி ஒரு நிலையை நினைத்துக்கூட பார்க்க முடியாது. இங்கே இப்படியொரு சுதந்திரம் அளித்தால், வாட்ச்மேன் இருபதாயிரமும், டிரைவர் முப்பதாயிரமும், எழுத்தர் வேலை செய்பவர்கள் ஐம்பதாயிரமும் தயங்காமல் கேட்பார்கள். அதாவது ஓரிரு மாதங்களில் கம்பெனியை இழுத்து மூட வேண்டியதுதான். தகுதிக்குமேல் கேட்பது தன்மானத்திற்கு இழுக்கு என்பது வெளிநாட்டாருடைய குணம் என்பது இந்த ஒரு சம்பவத்திலிருந்தே தெரிகிறது. இந்த ஓர் இடத்தில் இந்தியர்கள் மாறினாலே போதும். நாட்டில் வரவேண்டிய சுபிட்சம் விரைவாக வந்துவிடும்.

5. இப்பொழுது **Harmony**-க்கு வருவோம். அன்னை அன்பர்களுக்கு இது மிகவும் பிடித்தமான விஷயம். எங்கெல்லாம் வளர்ச்சி முன்னேற்றம் இருக்கிறதோ, அங்கெல்லாம் **Harmony** நிச்சயமாக இருக்கும். **Harmony** என்றால் என்ன என்று



பார்ப்போம். பல பேர் கூடி வேலை செய்யும்பொழுது எல்லோரும் கருத்தொருமித்து வேலை செய்வது **Harmony**-யைக் காட்டுகிறது. அதேசமயத்தில் ஒரே வேலையில் சம்பந்தப்பட்ட பல பேருக்கு மாறுபட்ட கருத்திருந்தால், அங்கே **disharmony** இருக்கிறது என்றர்த்தம். இப்பொழுது **Harmony** ஏன் சாதிக்கிறது **disharmony** ஏன் பலனைக் கொடுக்காமல் போகிறது என்பதையும் பார்க்க வேண்டும். ஒரு வேலையைச் செய்து முடிக்கவேண்டும் என்ற எல்லோருடைய கவனமும் அவ்வேலையின்மேல் இருக்கும்பொழுது அந்த வேலை தீவிரம் பெறுகிறது. தீவிரம் பெறுவதால் பலன் விரைவாகவும், அதிகமாகவும் வருகிறது. இதற்கு மாறாக வேலையை முடிக்க வேண்டும் என்று சிலருக்குத் தான் ஆர்வம் இருக்கிறது. பலருக்கு ஆர்வம் இல்லை. ஸ்தாபனத் தலைவரின் அதிகாரத்தைப் பலபேர் ஏற்பதில்லை. அவர் ஒன்று கூறினால் இவர்கள் வேறொன்று செய்கிறார்கள். கம்பெனி சம்பாதிக்க வேண்டும் என்ற பொது நோக்கமில்லாமல், அவரவர் சுருட்டிக் கொண்டுப் போகவே பிரியப்படுகிறார்கள் என்ற நிலை இருந்தால், விரயம் அதிகமாகி பலன் மிகவும் சுமாராகத்தான் இருக்கும். நாம் இப்படி நினைத்துப் பார்க்க வேண்டும். அதாவது ஒரு பெரிய பாறாங்கல்லை கயிறு கட்டி எல்லோரும் ஒரே திசையில் இழுக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால், அது நம்மை நோக்கி விரைவாக வரும். இவ்வாறின்றி பத்துபேர் பாறையை கிழக்குப் பக்கமாகவும், மேலும் பத்து பேர் பாறையை மேற்குப்பக்கமாகவும் இழுக்கிறார்கள் என்றால், பாறை எந்தப் பக்கமுமே நகராமல் வேலையே நடக்காத நிலை உருவாகிவிடும். நிறைய ஸ்தாபனங்களில் இம்மாதிரியான நிலைதான் உருவாகி இருக்கிறது. சிலர் வேலையை முடிப்பதில் ஆர்வமாக இருப்பார்கள். இன்னும் சிலர் யார் பெரியவர் என்ற போட்டி மனப்பான்மையுடன் வேலையைக் கெடுத்துக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட சூழலில் வேலை நடப்பதால் முழு ரிஸல்ட் வரவேண்டிய இடத்தில் பாதி ரிஸல்ட்தான் வரும். ஒரு வருடத்தில் முடிய வேண்டிய வேலை இரண்டு வருடத்தில் முடியும். அதாவது பலனும் குறைவாக இருக்கும். காலமும் நிறைய விரயம் ஆகும்.

மனிதனுக்கு இப்பொழுதுள்ள பிரச்சனையை எடுத்துக் கொண்டால் இவற்றில் பெரும்பாலானவை **Harmony** கெட்டுப் போனதால் வருகின்ற பிரச்சனைகள்தாம். உலகளவில் சுற்றுச் சூழல் கெட்டுவிட்டது என்றொரு பிரச்சனை உருவாகியுள்ளது. காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன. ஒன்று கனமழையினால் வெள்ளம் வருகிறது. அல்லது மழையின்றி வறட்சி நிலவுகிறது. வாகனங்களும் தொழிற்சாலைகளும் ஏராளமான புகையைக் கக்குவதால், காற்று மண்டலம் மிகவும் மாசு அடைந்துள்ளது. இதுபோக கார்பன்-டை-ஆக்ஸைடு காற்றில் அதிகரித்துள்ள-தால், அது சூரியனின் வெப்பத்தைக் கிரகித்துக் கொள்வதால் புவி நாளுக்குநாள் வெப்பமடைந்து வருவதாகக் கருதப் படுகிறது. தொழிற்புரட்சி வருவதற்குமுன் உலகில் இப்பிரச்சனை இல்லை. ஆனால் தொழிற்புரட்சி வந்த பிறகு சுற்றுச்சூழல் சுகாதாரம் மிகவும் கெட்டுவிட்டது. அதாவது மனிதனுக்கும் இயற்கைக்கும் முன்பிருந்த **Harmony** கெட்டு **disharmony** வந்துள்ளது. இப்பொழுது பழைய **Harmony** வந்தால்தான் மனித குலத்திற்கு நல்லது. அல்லது இப்படியே விட்டால், மனித குலத்திற்கே பெரிய ஆபத்து என்று சொல்கிறார்கள். **Harmony** எப்படிக் கெட்டது என்பதை நாம் பார்க்க வேண்டும். மனிதனுடைய நடவடிக்கைகளால் உண்டாகின்ற கழிவுப் பொருட்களை இயற்கைக் கிரகித்துக் கொள்வதற்கு ஓரளவு இருக்கிறது. இப்பொழுது இயற்கையே சமாளிக்க முடியாத அளவிற்கு மனித நடவடிக்கைகள் கழிவுப்பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கி விட்டதால், பழைய **Harmony** பேலனஸ் கெட்டுப்போய் **disharmony** வந்து விட்டது. ஆகவே நகரங்களில் குப்பைகள் வந்துவிட்டன, காற்று அசுத்தமாகிவிட்டது, குடி தண்ணீர் சுத்தமாகவில்லை, உஷ்ணம் அதிகரித்து விட்டது என்பதெல்லாம் இயற்கையே சமாளிக்க முடியாத அளவிற்கு மனிதனுடைய நடவடிக்கைகள் பெருகிவிட்டன என்பதைக் காட்டுகிறது. பழைய **Harmony** வருவதற்கு என்ன வழி என்றால், மனிதனுடைய வாழ்க்கை பழையபடி எளிமையாக வேண்டும். எல்லோரும் இன்று கார் வைத்திருக்கப் பிரியப்படுவதால் தான் **air pollution** வருகிறது. பிளாஸ்டிக் பொருட்களைக் கட்டுக் கடங்காமல் பயன்படுத்துவதால்தான் கழிவு நீர் குழாய்களும்,



கால்வாய்களும் பிளாஸ்டிக் பைகளால் அடைக்கப்பட்டு மழைக்காலத்தில் மழை நீர் வடியாமல் வீதிகளிலெல்லாம் வெள்ளம் வருகிறது. மேலைநாடுகளில் இந்த விபரீதத்தை உணர்ந்து காரைப் பயன்படுத்துவதை வெகுவாகக் குறைத்து மாநகரங்களுக்குள் பஸ் மற்றும் இரயிலில் மக்கள் போக ஆரம்பித்துள்ளனர். ஆனால் நம் நாட்டில் இப்பொழுதுதான் மக்கள் கார் வாங்கவே ஆரம்பித்திருக்கிறார்கள். ஐம்பது அறுபது வருடங்களுக்குமேல் கார் ஓட்டி சலித்துப் போனவர்கள் காரை விடுவது சுலபம். ஆனால் இப்பொழுதுதான் கார் என்ற சௌகரியத்தை அனுபவிக்க ஆரம்பித்திருக்கும் இந்தியாவைப் போன்ற வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள் இந்தச் சௌகரியத்-தையும் விட வேண்டும் என்றால் அது கடினம்.

முன்னேறுகின்ற குடும்பங்களைப் பொதுவாக கவனித்தால் **Harmony** சிறப்பாக இருக்கும். கூட்டுக் குடும்பமாக இருந்தால், குடும்பத்தில் பெரியவர்களின் வார்த்தையை இளைய தலைமுறையினர் அப்படியே மறுக்காமல் ஏற்றுக் கொள்வார்கள். சொத்துத் தகராறு, பாகப்பிரிவினை எல்லாம் அநேகமாக இருக்காது. மாமியார் மருமகள்களை தன் மகள் போலவே நடத்துவார்கள். பேரப்பிள்ளைகளுக்கிடையில்கூட போட்டி, பொறாமை என்றிவையெல்லாம் இருக்காது. ஆனால் இப்படிப் பட்ட சுமுகம் அவ்வளவு சுலபமாக வராது. அதற்குக் குடும்பம் மிகவும் பண்பானதாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட கூட்டுக் குடும்பங்கள் பொதுவாக அன்னை பக்தர் குடும்பங்-களாக இருந்தால், தினமும் சுமுக மலர்களை அவர்கள் அன்னைக்கு வைத்து வழிபட்டார்கள் என்றால், பல தலை-முறைகளாகப் பண்பால் கிடைக்கக் கூடிய சுமுகம், இம்மலர்-களை வைத்து வழிபடுவதாலேயே கிடைக்கிறது. பல வருடங்-களுக்கு முன்பு சென்னையில் வசிக்கும் அன்னை பக்தர் ஒருவர் ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் எனக்கு நான்கு பெண்கள் இருக்கிறார்கள். நால்வரும் வீட்டிற்கு வருவதில்லை. என்னுடனும் பேசுவதில்லை. அவர்களுக்குள்ளும் பேசிக் கொள்வதில்லை. இது எனக்குப் பெரிய குறையாக இருக்கிறது. இக்குறையை அன்னை தீர்த்து

வைப்பார்களா என்று கேட்டெழுதியிருந்தார். இதற்கு ஸ்ரீ கர்மயோகி அவர்கள் சுமுக மலரை அன்னைக்கு வைத்து வழிபட்டு வர, பலன் தெரியும் என்றெழுதினார். அந்தப் பெண்மணியும் அவ்வாறே ஒரு வாரம் செய்தார். அச்சமயம் தீபாவளி வந்தது. எந்தத் தீபாவளிக்குமே வராத பெண்கள் அனைவரும் அந்தத் தீபாவளிக்கு வந்தனர். வீடே கலகலப்பாகி விட்டது. அவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. உடனே ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கு இந்த நற்செய்தியை எழுதித் தெரிவித்து தன் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டார். வெறும் மலருக்கே இந்த ஆற்றல் இருக்குமா என்று நாம் அறிவால் கேட்டால் நம்மால் நம்ப முடியாது. ஆனால் மலர்களை அன்னையின் அருட்சக்தியை தாங்கி வரும் கருவிகளாகப் பார்ப்பவர்களுக்கு இத்தகைய பலன் கிடைப்பதில் எந்தவித ஆச்சரியமுமில்லை.

6. அடுத்ததாக பணிவு என்ற உண்மையின் சொருபமான நற்குணத்திற்கு வருவோம். பணிவு உண்மையிலேயே ஒரு தெய்வீகமான குணம். பகவான் ஸ்ரீ அரவிந்தர் மிகவும் பணிவு நிறைந்தவர். அவர் தன்னுடைய கவிதைப் படைப்புகளை அவருடைய சீடர்களாக இருந்த மற்ற கவிஞர்களுக்கே அனுப்பி விமர்சனம் செய்யச் சொல்வாராம். எங்கேயாவது குரு தன்னுடைய சீடர்களிடமே விமர்சனத்தை வரவேற்கிறார் என்பதை நாம் பார்த்திருக்கிறோமா? அன்னையும், பகவானைப் போலவே மிகவும் பணிவு நிறைந்தவர். பொதுவாக குருநாதர் என்றாலே சீடர்கள் கைகட்டி, வாய் பொத்தி, சிரம் தாழ்த்திதான் நிற்பார்கள். ஆனால் அன்னை அப்படி யாரையும் கட்டுப் படுத்தவில்லை. சீடர்களாக இருந்தாலும்கூட நெருக்கமாக நண்பர்களாகத்தான் பழகினார். ஆரோவில்லை நிறுவியதற்காக அவருக்கு அமைதிக்காக நோபல் பரிசு வழங்க நோபல் கமிட்டி முன்வந்த பொழுது “பகவானுடைய சேவையைத்தான் நான் தொடர்ந்து செய்கிறேன். இந்த உடம்பிற்கென்று தனிப்பட்ட எந்த மரியாதையோ, அங்கீகாரமோ தேவையில்லை” என்று சொல்லி அப்பரிசை வாங்க மறுத்தார். இப்படிப்பட்ட பணிவை நாம் யாரிடமாவது பார்க்க முடியுமா? அன்னை, இறைவன்



இயற்கையிலேயே மிகவும் பணிவானவர் என்றுதான் கூறுகிறார். ஆண்டவன் மனிதர்களைப்போல் எப்பொழுதும் தன் பெருமை- களையே நினைத்துக் கொண்டும், பேசிக் கொண்டும் இருப்ப- தில்லை. ஆனால் மனிதர்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு பெண் தன்னை அழகானவள் என்று நினைத்து விட்டாலே போதும், நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் கண்ணாடிமுன் போய் நின்று கொள்வாள். ஏதேனும் ஒரு விசேஷத்திற்கு மேக்அப் செய்து கொண்டு கிளம்பினாள் என்றால், அவளைக் கண்டு கணவன் புகழ்ந்தாலன்றி திருப்தியடையமாட்டாள். இப்படிப் புகழ் போதையில் மூழ்கியவரின் மத்தியில் ‘நான் அடுத்த பிறவி எடுத்து வரும்பொழுது யாருக்கும், எவருக்கும் தெரியாமல் என் வேலையைச் செய்ய விரும்புகிறேன்’ என்று அன்னை சொல்லி இருக்கிறார் என்றால், அவர் எந்தளவு பணிவைக் காட்டுகிறார் என்று பாருங்கள்.

பொதுவாகவே பதவி பலம், பணபலம் இருப்பவர்களிடம் பணிவைக் காண்பதரிது. அவர்கள் சொல்கின்ற கருத்திற்கு எதுவும் மாற்றுக் கருத்து நாம் சொல்ல முடியாது. எல்லாம் தங்களுக்குத் தெரியும் என்ற எண்ணம் வந்துவிடுவதால், அவர்களுக்கு நாம் எந்த யோசனையும் வழங்கவும் முடியாது. பலர் அறிவில்லாமல் பேசினால்கூட மற்றவர்கள் கேட்டுக் கொண்டுதான் ஆக வேண்டும். இந்த இடத்தில்தான் டார்சி மிகவும் வித்தியாசப்படுகிறான். லிஸி காரமாகத் திட்டினாலும், அந்தத் திட்டில் உண்மையிருக்கிறது என்று ஏற்றுக் கொண்டு தன் சுயநலம், ஆணவம் ஆகியவற்றை விட முன்வருகிறான். அந்தக் காலத்துப் பிரபு வம்ச இளைஞர்களிடம் இத்தகைய பணிவைப் பார்ப்பதே அதிகம். இப்படி ஒரு சுடுசொல் சொல்லிவிட்டால், காலம் முழுவதும் அந்தப் பெண் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள்.

அதிகார உலகம் இப்பொழுது சற்று மாறிவருகிறது. தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் வாக்காளர்களை நேரடியாகப் பார்த்து நன்றி தெரிவிக்கிறார்கள். பிரதமராக இருந்தாலும், பாராளுமன்றத்தில் எதிர்கட்சி உறுப்பினர்கள் தைரியமாக மறுத்துக் கருத்துத் தெரிவிக்கிறார்கள். அவர்கள்

மறுப்பையும் மாற்றுக் கருத்தையும் பிரதமர் ஏற்றுக் கொண்டு நன்றியும் தெரிவிக்கிறார். பணியிலிருக்கும் பொழுது அரசு ஊழியர்கள் இறந்து போனால், அரசாங்கத்தின் துறைத்தலைவரே நேரடியாக இறந்தவர் வீட்டிற்கு வந்து **retirement benefits**க்கு உண்டான காசோலையை வழங்கிச் செல்கிறார். இருபது வருடங்களுக்கு முன்பெல்லாம் அரசாங்க அதிகாரிகளை அவர்கள் அலுவலகத்திற்குப் பார்க்கச் சென்றால், நிற்க வைத்துதான் பேசுவார்கள். உட்காரச் சொல்வதே அரிது. ஆனால் இப்பொழுதெல்லாம் உள்ளே வந்தவுடன் முதல் வேலையாக அமரச் சொல்கிறார்கள். இத்தகைய பணிவின் வெளிப்பாடுகள் காலப்போக்கில் மேன்மேலும் வலுவடையும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

உண்மையின் வெளிப்பாடாக இதுவரை ஆறு கருத்துகளை விவரித்துள்ளேன். பாஸிட்டிவாக மனிதனிடம் தென்படும் எந்தக் குண விசேஷத்தையும் உண்மையின் வெளிப்பாடாக நாம் எடுத்துக் கொள்ளலாம். இன்று பொய்யின் கை ஓங்கி உண்மையின் கை தாழ்ந்து நிற்கிறது. ஆனால் உண்மையை நம்புகிறவர்கள் அன்னையின் பக்கம் வந்துவிட்டால், உண்மையின் பலத்துடன் அன்னையின் ஆன்மீக பலமும் சேர்ந்து உண்மையே எப்பொழுதும் வெல்லும்படி அன்னை செய்வார். அதை நாம் நிச்சயம் நம்பலாம்.

முற்றும்

### ஜீவிய மணி

**நம்மைச் சுற்றியுள்ளவர், நம்மைச் சார்ந்தவர், நம் வேலைகளைச் செய்பவர், நம் வேலையின் பலனைப் பெறுபவர் எவரானாலும் அவரிடம் நம் வேலை சம்பந்தமான குறையைக் கண்டால், அதற்கு நாம் பொறுப்பேற்பது ஜீவியத்தின் குறையை அகற்றுவ-தாகும், consciousness responsibility எனப்படும்.**

குறை எவருடையதாயினும் பொறுப்பு நம்முடையது.



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 95. ஜடத்தில் சத்திய ஜீவிய ஜோதி - கீரீம் கலர்.

- ஆன்மீகம் ஒரு பெரிய சாஸ்த்திரம், சமுத்திரம் போன்றது.
- கணிதம், விஞ்ஞானம், பொருளாதாரம், வரலாறு என சுமார் 50-க்கு மேற்பட்ட கல்வித்துறைகள் ஏற்பட்டு விட்டன.
- பல ஆயிரம் ஆண்டுகட்குமுன் கல்வி எனில் காவியம் எழுதுவது. காவியம் எழுத ஒருவன் ரிஷியாக இருக்க வேண்டும் என்பது அன்றைய கருத்து.
- நாகரீகம் வளரும்பொழுது கல்வி, காவியம், தத்துவம் எனப் பிரிந்தது. பிறகு கணிதம் ஏற்பட்டது.
- பௌதீகம் என்ற ஒரு துறை 20 (அல்லது) 30 ஆகப் பிரிந்து அவற்றிற்கு உட்பிரிவுகள் ஏற்பட்டு வளர்ந்து விட்டன.
- ஆன்மீகம் கல்வியைவிட உயர்ந்த துறை, அடிப்படையானது.
- அன்று இத்துறையின் பரப்பு, வீச்சு என்று அறிவதே பிரமிப்பாக இருக்கும். இன்று அதை விவரமாக எழுதினால் அதுவே ஒரு நூலாகும்.
- பகவான் எழுதிய முப்பது வால்யூம்களும், அன்னை எழுதிய 35 வால்யூம்களும் போக, இதுவரை வெளிவராத எழுத்து, நூல், கருத்து ஏராளமாக உண்டு. கடலினும் பரந்த துறை அன்னை வாழ்வு.
- சத்திய ஜீவியம் ஜோதியாவது அவற்றுள் ஒரு தலைப்பு.
- பகவான் ஜெயிலில் கண்ட நாராயண தரிசனம், அர்ஜுனன் பெற்ற விஸ்வரூப தரிசனம். அதுவே பூரண யோகத்திற்கு அடிப்படையான தரிசனம், முதல் சித்தி என்று அறிவேன். அதுவே அனைவரும் அறிந்தது என நான் எண்ணி-யிருந்தேன்.

  பகவான் அர்ஜுனனுடைய தரிசனமும், தான் பெற்ற தரிசனமும் ஒன்று என்று எங்கும் கூறவில்லை. வேறு

என்றும் கூறவில்லை. அதனால் இல்லாததை உண்டு என நினைக்கத் தோன்றுகிறது.
இத்தவறு அடிக்கடி எழும்.

- 1980-இல் அஜெண்டா வந்த பொழுது பகவான் கண்டது சத்திய ஜீவிய தரிசனம் என அன்னை கூறுவது தெரிந்தது.
- அதில் கோர பாவம் இல்லை என்பது நினைவுக்கு வந்தது. முதன் முறையாக எனக்குத் தெளிவு ஏற்பட்டது.
- அஜெண்டாவில் அன்னை அநேக புதிய விஷயங்களைக் கூறுகிறார்.
- அஜெண்டா புரிவது சிரமம். இது என் இதயம். என் அன்பர்கட்கு வழங்கும் பரிசு என அஜெண்டாவைக் கூறுகிறார்.
- **Evening Talks**-இல் பகவானைப் பார்க்க வந்தவர் பிரம்மச்சரியத்தைப்பற்றிக் கேட்கிறார். பகவான் நான் எந்தக் கட்டுப்பாட்டையும் விதிப்பதில்லை. அவரவர்களே ஏற்கும் கட்டுப்பாடே கட்டுப்பாடு என்கிறார்.
- சிறு தெய்வ வழிபாடு உகந்ததல்ல என பகவான் எழுதுவது உண்டு.
- அவர் எதையும், எவரையும் கட்டுப்படுத்துவதில்லை.
- அவர் கூறியவற்றை நம் உள்ளுணர்வில் புரிந்து ஏற்பதே முறை.
- இதனால் சத்திய ஜீவியம் அருகே வரும் தகுதியுள்ளவர்களும், விலகும் நிலை ஏற்படுகிறது.
- சத்திய ஜோதி பொன்னிறம்.
- அது மனத்தில் மஞ்சளாகவும், உயிரில் ஊதாவாகவும், உடலில் சிவப்பாகவும் தெரியும் என எழுதியுள்ளார்.
- ஒரு அன்பருக்கு கிரீம் கலரில் பகவான் தோன்றுகிறார். எப்படி விளங்கும்.
- ஜீவனில் சத்திய ஜோதி கிரீம் கலராக இருக்கும் என்று பார்க்கும் பொழுது புரிகிறது.
- ஆன்மீகம் கடல்.



- குருவில்லாமல் யோகம் செய்யக்கூடாது.
- பூரண யோகத்திற்குப் பகவான், அன்னை மட்டுமே குரு.
- மனித குரு தேவைப்படாத பின்னரே மனத்திலுள்ள ஜகத்குரு வழி காட்டுவார்.
- பகவானுக்கு அந்நிலை ஏற்பட்டபொழுது மௌன குரு உன்னைப் பிசாசு பிடித்துள்ளது என்றார்.
- அசரீரியைக் கேட்டுப் பணிந்த பகவான் பிற்காலத்தில் அதை நான் புறக்கணித்தேன் என்கிறார்.
- இவையெல்லாம் பகவானுடைய நிலை என்றால் அன்பர் தன்னை பகவானோடு ஒப்பிடக் கூடாதல்லவா?
- எதைச் செய்தாலும் அது முனைப்பு **(initiative),** அகந்தையின் செயல் என்பதால் யோகத்தை மேற்கொள்ள அதுவும் தடை.
- சமர்ப்பணம் மட்டுமே சரியெனில், எதையும் எளிதில் சமர்ப்பணம் செய்ய முடிவதில்லை.
- சமர்ப்பணம் அடியோடு நெடுநாள் மறந்து போவது அன்பர் நிலை.
- பிரச்சனை தீரவில்லை, பிரார்த்தனை பலிக்கவில்லை என்பது குறைவு.
- அந்த நிலையில் கேட்கும் முதற்கேள்வி, சமர்ப்பணம் செய்தீர்களா? இல்லை என்ற பதில் தவறாமல் வரும்.

  மேலும் பேசினால் எனக்கு ஒரு வாரமாக சிரமம். அன்னை நினைவே வரவில்லை. நீங்கள் கேட்கும்பொழுதுதான் நினைவு வருகிறது என்பார்.

  சரி இப்பொழுது சமர்ப்பணத்தை ஆரம்பிக்கலாம் எனில், அது ஒன்றுதான் என்னால் முடியாது என்பது தவறாமல் வரும் பதில்.
- ஆன்மீகம் கடல், பூரண யோகம் சமுத்திரம். படகில் இங்கெல்லாம் பிரயாணம் செய்ய முடியாது. படகுமில்லாமல் பயணம் செய்ய வழி கேட்பது வழக்கம்.

## அஜெண்டா

### *கீழ்ப்படிதல்*

- சிறியது விரும்பி பெரியதற்குப் பணிவது சுதந்திரம் அபரி-மிதமாகப் பூர்த்தியாக உதவும்.
- அளவுக்கு மீறி அதிகாரத்திற்கு உட்படுதல் மூட நம்பிக்கை - அன்னை.
- எவ்வளவுக்கு எவ்வளவு நாம் சிறியதாக உணர்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு எதிர்ப்பு எழும் - அன்னை.
- மனமும், ஆத்மாவும் சரியானால் எதுவும் தவறாகாது.
- ஈஸ்வரனே சக்திக்குச் சரணடைந்தபொழுதே ஈஸ்வர-னுடைய இறையம்சம் பூர்த்தியாகும்.

  அந்த நிலையிலும் பெண் சற்று அதிகாரம் செய்வாள். இழுத்துப் பிடிப்பது சரி எனப் பகவான் கூறுகிறார்.
- கடவுள்கள் திருப்தி படாவிட்டால் ரிஷிகளை நேரடியாக சச்சிதானந்தம் போகத் தடை செய்வார்கள்.
- அன்பானவர் உயர்ந்த ஜீவியமுடையவரானால் அவர் சமைத்த உணவு தேவாமிர்தமாகும். சாப்பிட்டு ஜீரணமாகும் பொழுது உடலெல்லாம் பூரிக்கும், உடலைக் கடந்து ஜீவன் பூரிப்பால் மலரும்.
- ஆசை எவ்வளவு உயர்ந்ததானாலும், பூர்த்தியானபின் திகட்டும்.
  இது உடலின் ஆசை.
- உயிரின் ஆசை பூர்த்தியானால், பூர்த்தி செய்தவர் குறையெழும், தவறாக நடக்கச் சொல்லும், துரோகம் எழுந்து நம்மை மீறிச் செயல்படும்.
- ஆசைக்கோர் அளவில்லை. கிடைக்கிறது கிடைத்தால் ஆச்சரியம் எழும். ஆச்சரியம் சிறிது நேரத்தில் மாறும். பூர்த்தி செய்தவர்மீது பொறாமை எழும். நீ எனக்குச் சேவை செய்யக் கொடுத்து வைத்திருக்கிறாய் என்று மனம் பேசும், வாய் கூசாமல் கூறும். தொடர்ந்து இந்தச் சேவை செய்ய உன்னை அனுமதிக்க மாட்டேன் என கர்ஜனை செய்யும். தொடர்ந்து இந்தச் சேவையை எனக்கு நீ செய்ய வேண்டும், அதனால் உனக்கு நல்ல பெயரும் வரக் கூடாது என வெட்கமில்லாமல் கூறும்.

  ‘நீ எவ்வளவு உயர்ந்தாலும், நான் எவ்வளவு மட்டமாக இருந்தாலும், என் வாயால் உன் உயர்வை ஏற்க மாட்டேன். இந்த ஜென்மத்தில் மட்டுமில்லை, எந்த ஜென்மத்திலும் அந்தப் பாவத்தை நான் செய்ய மாட்டேன்’ என மனம் சபதம் கூறும். சுமார் 14 வருடங்கள் இந்த **discipline**-ஐ கட்டுப்-பாட்டை விரும்பி ஏற்றவருக்கு, முடிவான நிலையிலும் முனைப்பு இல்லாமலிருந்தும், இனி என் வீட்டிற்கு வராதே என அசரீரியாக எழுந்து ஆச்சரியமாக எழுதி கையெழுத்து இட்டு, அவருக்கு அவலத்தினின்று விடுதலை கிடைத்தது. அதன்பின் அதே நிலையிலுள்ள கயமை, சிறுமை, பொய், தீமை அவரை அணுகவில்லை.
- பொறுமை, தீமை தானே விலக வழி செய்யும்.
- ஆத்மா பெறும் அனுபவ அறிவு, காலத்தைக் கடந்த நிலையில் அன்பருக்கு விடுதலை தருகிறது. செய்பவன்மீது அனுதாபப்பட்டால் மீண்டும் வரும். தீமை செய்பவன், கயமையான கொடுமையை விரும்பி செய்பவன் கஷ்டப் படக் கூடாது என அறிவோடு விரும்பினால் அவன் நான் கஷ்டப்படுவதால் நீ வருத்தப்படுவதை நான் கண்டு மகிழ வேண்டும் என தன் உபாதையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வான்.
- அதையும் பொறுத்திருந்தால், ‘அந்த உலகில்’ கொடுமைக்கு ஆளானவர் அன்பரின் முயற்சியால் விடுதலை பெற்று பிறருடைய இனிமையான சேவையைப் பெறுவர்.
- அன்னை கூறியவற்றை அப்படியே வேதவாக்காகப் பின்பற்றினால் வேதம் பெண்களின் தீமையை விவரித்ததை-யும் கடந்து பலனை வாழ்வில் பெறலாம்.
- அன்பர் தவறாது பெறலாம்.
- அன்பர் யோகத்தால் கயமை திருவுருமாறாது. அதற்கு கயமை இசைய வேண்டும்.
- ‘நம்மை பகவான் பொறுத்துக் கொள்கிறார்’ என்று அன்னை தம்மையே குறிப்பிடுகிறார்.

## அன்னை இலக்கியம்

## வேதம் புதிது

இல. சுந்தரி

*அம்மா:* கார்த்தி! ஏப்ரல் நாலாந்தேதியோடு உனக்குப் பதினாறு வயது பூர்த்தியாகிறது. நினைவிருக்கா?
(அரைகால் சட்டையணிந்து நீலநிற பனியனுடன் அப்பாவின் ஸ்கூட்டரை துடைத்துக் கொண்டிருந்தான் கார்த்தி என்ற அவள் மகன்.)

*கார்த்தி:* ஆமாம் அதற்கென்ன இப்போ? இம்முறை என் பிறந்தநாளை கேக் வெட்டி விசேஷமாய்க் கொண்டாட ஏதாவது திட்டம் வைத்திருக்கிறாயா?

*அம்மா:* இந்தக் கிண்டலில் ஒண்ணும் கொறைச்சல் இல்லை (என்று தோளில் இடித்துத் தன் எதிர்ப்பைத் தெரிவித்தாள்.)

*கார்த்தி:* (சிரித்துக் கொண்டே) பின்ன என்னம்மா? திடீரென்று இப்போ என்ன வயதாராய்ச்சி?

*அம்மா:* எதிர் அகத்து சாஸ்திரிகள் பேரனைப் பார்த்தாயா? அவனும் பத்தாவதுதான் படித்திருக்கிறான். வேதமும், சமஸ்கிருதமும் படிக்கிறான். (என்று மெல்ல பீடிகை போட்டாள்)

*கார்த்தி:* ஆமாம் தெரியுமே அதற்கென்ன இப்போ?
(வண்டியைத் துடைக்கும் செயலில் கவனம் சிதறாமல் அம்மாவுடன் பேசுகிறான்.)

*அம்மா:* நீயும் பிராம்மனா, இலட்சணமா வேதக்ளாஸ் போனா நன்னாயிருக்குமோல்யோ?

*கார்த்தி:* பிராம்ண லட்சணம் வேதக்ளாஸ்னு யார் சொன்னா உனக்கு?

*அம்மா:* குதர்க்கம் பேசாத கார்த்தி. உன்னிஷ்டம் போல் நீ கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்க அப்பா ஏற்பாடெல்லாம் செய்யறார். என் ஆசைக்கு நீ வேதம் படிக்கக் கூடாதா?

*கார்த்தி:* என் கம்ப்யூட்டர் ஆசை நிறைவேறினா, உன் வேதம் கற்கும் ஆசையும் நிறைவேறிடும்.



*அம்மா:* ஏதாவது பேசி என்னை ஏமாற்றப் பார்க்காதே. முகமதியர்களைப் பாரு. என்ன வேலையானாலும், காலங்கார்த்தால குர்ரான தூக்கிண்டு மசூதிக்குப் போறா. வெள்ளிக்கிழமையாச்சுன்னா தலையிலே குல்லாய் போட்டுண்டு, கடையோ வியாபாரமோ பாதியிலே நிறுத்திட்டு மசூதிக்குப் போயிடறா. கிறித்தவாளைப் பாரு, காலையிலும், இரவிலேயும் தவறாம குடும்பத்தோட ஜபம் பண்றா. நாம இந்துவா பிராமணாளா பொறந்து, நம்ம வேதத்தைப் படிச்சு, நம்ம ஜாதிய, மதத்த காப்பாத்த நெனக்கறதேயில்ல. (மனக்குறையுடன் கூறினாள்)

*கார்த்தி:* அம்மா! நா ஒண்ணு கேட்டா பதில் சொல்லுவியா?

*அம்மா:* கேளு, கேளு, தெரிஞ்சாச் சொல்றேன்.

*கார்த்தி:* தினமும் காலைல எட்டுமணிக்கு, காவி கட்டிண்டு ஜடா முடியெல்லாம் வெச்சுண்டு ஒரு சாமியார் வராறே, நீ ஏன் அவருக்கு ஒண்ணும் கொடுக்கறதில்ல?

*அம்மா:* நா சொல்றதுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்?

*கார்த்தி:* நீ பதில் சொல்லு. அப்போ சம்பந்தம் என்னங்றது தானாப் புரியும்.

*அம்மா:* நல்ல மேதாவிப் பிள்ளையத்தான் பெத்துருக்கேன். அந்தச் சாமி, பகல்ல பிக்ஷைக்கு வரான். ராத்ரிலே சுருட்டுப் பிடிக்கிறான். சீட்டு வெளயாடறான். போறாத்துக்கு பொம்மனாட்டிகளைக் கேலி பேசறான். அவன் சாமியாரா என்ன? (கோபமாய்க் கூறுகிறாள்)

*கார்த்தி:* காவி கட்டி, ஜடா முடி வெச்சிருக்காரே அதுக்கு மரியாதை தர வேண்டாமா?

*அம்மா:* காவி கட்டினவாள்ளாம் சாமியார் ஆயிடுவாளா? ஜடாமுடி வெச்சுண்டா என்ன வேணாச் செய்யலாமா? நம்ப கந்தசாமியைப் பாரு ஏழைதான் படிப்பும் இல்ல. நன்னா உழைக்கறான். யார் பொருளுக்கும் ஆசை படறதில்ல, பொய்யில்ல, திருட்டில்ல, அவனெப் பார்த்தால்தான் எனக்கு மரியாதை வரது.

*கார்த்தி:* காவி கட்டிண்டா மாத்திரம் போறாதுன்னு சொன்னி-யோல்லியோ. அது மாதிரிதான் இதுவும். வேதம் படிச்சா மட்டும் போதாது. பூணூல் போட்டுண்டா மட்டும் போதாது. எதுத்தாத்து சாஸ்திரிகள் பேரன் வேதக்ளாஸ் போறது மட்டும் உனக்குத் தெரியும். வேதம் படிக்கறவனுக்குத் தைரியம் வேணும்னு ஸ்ரீ அரவிந்தர் சொல்லி இருக்கிறார். அந்தப் பையன் சுத்தக் கோழை. யார் மிரட்டினாலும் பயந்துண்டு பொய் சொல்றான். தைரியமா உண்மை பேச முடிஞ்சாத்தான் வேதம் பலிக்கும். அவா ரொம்ப ஆசாரம் அப்டியிப்படிங்கறயே. நாடார் வீட்லதான் கார்த்தால இட்லி வாங்கிச் சாப்பிடறா. அது உனக்குத் தெரியுமா?

*அம்மா:* என்னடா கர்மம் இது?

*கார்த்தி:* கர்மம்னா செயல்ன்னு அர்த்தம். நல்ல கர்மம்தான் செய்யறா. நாடார் வீட்டம்மா சுத்தபத்தமாத்தான் இட்லி வியாபாரம் பண்றா. அவளும் மனுஷிதான். தான் ஒருத்தியாய் இருந்திண்டு யார் காலிலேயும் விழாம தனக்குத் தெரிஞ்சதைச் செய்து பிழைக்கிறா. அவா கிட்ட இட்லி வாங்கிச் சாப்பிடறதில தப்பென்ன? ஆனா அதை ரகசியமா செய்யறதுதான் தப்பு. தாந்தான் உலகத்தில உத்தமன்னு சொல்லிக்றதுதான் தப்பு. ஊர்ல வெள்ளம் வந்தா எல்லாரையும் ஒரேயிடத்தில தங்க வைக்கறா. அப்போ நாள், நட்சத்திரம், ஜாதிமதம் பார்க்க முடியுமா? எல்லோருக்கும் வயிறுண்டு, பசி தாகமுண்டு. முறையா வாழணும். சுத்தமா இருக்க-ணுங்கறது எல்லார்க்கும் பொது.

*அம்மா:* அப்படீன்னா பிராம்ணா வேதம் சொல்லணும்னு ஏன் வச்சிருக்கு?

*கார்த்தி:* பிராமணா வேதம் சொல்றது இல்லம்மா. வேதம் சொன்னா பிராம்ணன் ஆகலாம்.

*அம்மா:* என்னடா குழப்பற?

*கார்த்தி:* ஆமாம்மா. ஸ்ரீ அரவிந்தர்னு ஒரு மகா புருஷருடைய வார்த்தையை லைப்ரரில படிச்சேன். ஒவ்வொரு



மனிதனும் பிராம்மனாகுமுன் பூரண க்ஷத்ரியன் ஆகணும்னு சொல்லியிருக்கிறார். அதனால பிராமணன்னு பொறக்கறதில்ல. பொறந்தப்றம் பிராமணனாகணும். எம்.ஏ படிச்ச அப்பாவோட பிள்ளைன்னா அவனும் எம்.ஏ ஆயிடுவானா? எம்.ஏ படிச்சாத்தானே எம்.ஏ ஆவான்? அது போலத்தான் இதுவும். யார் படிச்சாலும் பட்டம் வாங்கலாம். யார் பிரம்மத்தை உணர்ந்தாலும் பிராமணனாகலாம். வேதம் படிக்க பொய் சொல்லக் கூடாது.

(மதர் சொன்னது சரிதான் என்று முணுமுணுக்கிறான்.)

*அம்மா:* எந்த மதர்? என்ன சொன்னா?

*கார்த்தி:* மதர்னா அம்மான்னு அர்த்தம்.

*அம்மா:* அது தெரியும் யாரோட அம்மா? என்ன சொன்னா? நீ அதைச் சரின்னு சொல்றேன்னுதான் கேட்டேன்.

*கார்த்தி:* யாரோடவோ அம்மாயில்ல. நம்ப எல்லார்க்கும் அம்மாவைச் சொன்னேன். என்ன சொன்னாத் தெரியுமா? நம்ப மதம், நம்ப ஜாதின்னு எதையோ காப்பாத்தற பிடிவாதத்தில எல்லாத்தையும் தாண்டி மேல இருக்கற பரப்பிரம்மத்திற்கு மதமே இல்லேங்றத மறந்துட்டோம்னு சொன்னா. அதைச் சொன்னேன்.

*அம்மா:* நம்ப எல்லோரோடவும் அம்மாவுக்கு மதர்னு பேரில்ல. அம்பாள்னு பேர். மதமும், மதத் தலைவர்களும் இல்லேன்னா கடவுளப்பத்தி ஒண்ணுமே தெரியாமப் போயிருக்குமே.

*கார்த்தி:* அங்கதான் நீ தப்பு பண்ற. அளவுகடந்த, அனந்தமான பரப்பிரம்மத்தை மனம் புரிஞ்சிக்க வச்ச ஏற்பாடுதான் மதம் என்பது. மதமே எல்லாம் இல்ல. நாட்ல எத்தனை மதமிருக்கு? என்ன பிரயோசனம்? நா பெரிசு, நீ பெரிசுன்னு சண்டைதான் மிஞ்சியது. ஒண்ணு பரம்பொருள்னு சொல்றமே தவிர அனுபவமா உணரல. உணர முயற்சியும் பண்ணாம சண்டை போட்டுக்-கறோம். கொஞ்ச நாளைக்கு மதத்தையெல்லாம் விட்டுட்டு ஒத்துமையா இருந்தா தெளிவு வரும்.

*அம்மா:* பெரிய விவேகி மாதிரி பேசி என்ன குழப்பறத விட்டுட்டு வேதம் படிக்க ஆரம்பி. அது போதும் எனக்கு.

*கார்த்தி:* சரிம்மா வேதம் படிக்கறேன். அது எதுக்குன்னுதான் சொல்லேன்.

*அம்மா:* இது என்ன கேள்வி? பிராம்மணா பொறந்து வேதம் படிக்கலைன்னா ஜன்மம் சாபல்யம் அடையாது.

*கார்த்தி:* ஜன்ம சாபல்யங்றது தன்னைக் காப்பாத்திக்கறது. மோட்சம் ஆன்மாவின் சுயநலம்னு ஸ்ரீ அரவிந்தர் சொல்லியிருக்கார்.

*அம்மா:* ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அரவிந்தர்ங்கறயே அவர் யாரு? அவர் சொன்னதை நாம ஏன் கேட்கணும்?

*கார்த்தி:* (மனம் நெகிழ்ந்து) அப்படிச் சொல்லாதே அம்மா! யாருக்கு விருப்பு, வெறுப்பு இல்லயோ அவா சொல்லறத கண்டிப்பா கேக்கணும்மா. நாமெல்லாம் ஏன் மனுஷாளாப் பொறந்தோம்னு தெரியாம நாம வாழும் போது அதைத் தெளிவிக்க நம்மிடையே அவதாரம் எடுத்து வந்த பரப்பிரம்மம்மா அவர்.

*அம்மா:* எனக்குத் தெரியாது கார்த்தி. சங்கராச்சாரியார், ஆழ்வார், நாயன்மார் என்றெல்லாம் பெரியவாளப் பத்தி கேள்விப்பட்டிருக்கேன். அவாளவிடப்பெரியவரா இவர்?

*கார்த்தி:* அம்மா! சங்கராச்சாரியார் இறைவன்தான் நிஜம். உலகம் மாயை. பொய் என்றார். ஆனால் நாத்திக-வாதியோ உலகம்தான் நிஜம். கடவுள் பொய் என்றான். ஸ்ரீ அரவிந்தர்தாம், இறைவனும் உண்மை உலகமும் உண்மை. உலகம் இறைவனின் வெளிப்பாடு என்றார். மதவாதிகளும், மற்றவர்களும் வாதி, பிரதிவாதிகள் போல் தத்தம் கருத்தே நியாயமானது என்பவர்கள். இவர்கள் ஒரு பக்கமாகச் செய்தியைப் பார்க்கின்ற-வர்கள். முழுமையாகப் பார்க்கக் கூடியவர் நீதிபதி ஒருவர்தாமே அம்மா? அந்த நீதிபதிதாம் ஸ்ரீ அரவிந்தர்.

*அம்மா:* புரியல கார்த்தி. அவர் நீதிபதியா இருந்தவரா?



*கார்த்தி:* ஆமாம்மா இந்த உலகத்தில இருக்கிற கோர்ட்ல இல்லம்மா. எல்லாத்துக்கும் மேல ஒருத்தன் இருக்கான். அவன் பார்த்துப்பான்னு சொல்லுவியே. அந்த ஒருவன் அவர்தாம்மா என்றான் கார்த்தி.

*அம்மா:* கடைசியில் நீயும் ஒரு மனுஷரைக் காட்டி அந்த ஒருத்தர் அவர்தாம் என்கிறாயே. இதுமட்டும் ஒரு பக்கமா பாக்கிறதில்லையா?

*கார்த்தி:* அவர் மனுஷர் இல்லம்மா. மனிதனாகத் தோன்றி இறைவனாக முடித்தவர் என்று அவரைப் பற்றி ஒரு பெரியவர் எழுதியிருக்கிறார்.

*அம்மா:* சரி! அப்படிப் பார்த்தாலும் மனிதனாக ஆரம்பித்துத் தானே இறைவன் ஆனார்.

*கார்த்தி:* ஆமாம் முதலிலேயே சொன்னேன் அல்லவா? மனிதப் பிறவியை இறைவன் எதற்காகச் சிருஷ்டித்தாரோ அதை அவர்தானே நடத்திக் காட்ட வேண்டும். நாமெல்லாம், படைப்பிலேயே மனிதன்தான் உயர்ந்த பிறவி என்று எண்ணியதுடன் மோட்சம்தான் முடிவு என்று நினைத்துக் கொண்டிருந்தோம் அல்லவா?

*அம்மா:* ஆமாம் அதிலென்ன தவறு? ரொம்பப் பெரியவாள்-ளாமே அதைச் சொல்லியிருக்காளே.

*கார்த்தி:* அதற்கும் மேலே அதிமானுடம்னு ஒன்று இருப்பதை ஸ்ரீ அரவிந்தர்தாம் சொல்லியிருக்கிறார்.

*அம்மா:* (பெரு வியப்புடன் கார்த்தியைப் பார்க்கிறாள்.) அப்படியே பார்த்தாலும் இறைவனோட ஐக்கியப் படறதுதானே முடிவு? அதைத்தானே பெரியவாள் சொல்லியிருக்கா. அதைச் சொல்லத்தானே மதங்கள் எல்லாம் இருக்கு?

*கார்த்தி:* ஆமாம்மா. இறைவனோட ஐக்கியப்படற வழியைச் சொல்வதுதான் மதம் என்பது. ஆனால் அதுவே இறைவன் இல்லை.

*அம்மா:* அந்தப் படியிலே ஏறித்தானே இறைவன் கிட்டப் போகணும்?

*கார்த்தி:* ஆமாம்மா இறைவன் கிட்டப் போயி அங்கேயே

இருக்கறதுதான் உசத்தின்னு நாமெல்லாம் நினைக்கிறோமில்லையா? அதை விட உசத்தி (உயர்ந்தது) எதுன்னு ஸ்ரீ அரவிந்தர் சொல்லியிருக்கார்.

*அம்மா:* (ஆச்சர்யத்துடன்) இறைவனை விட எது ஒசத்தி (உயர்த்தி)?

*கார்த்தி:* அது அப்படியில்லம்மா. இறைவனோட சேருவது நமக்குச் சந்தோஷம்னா, நமக்குள்ளே இறைவன் இங்கே வெளிப்படுவது அவருக்குச் சந்தோஷமாம். இப்போ சொல்லு. நீ எதைத் தேர்வு செய்வே?

*அம்மா:* நம்ப சந்தோஷத்துக்காக நாம முயற்சி எடுக்கறது சுயநலம். மத்தவா சந்தோஷத்துக்கு வாழறது ஒசந்தது. அதிலும் கடவுளை நம்மால் சந்தோஷப்படுத்த முடியும்னா அதைவிடப் பெரிய சந்தோஷம் எது?

*கார்த்தி:* இப்போ, நீயே, பாயிண்டுக்கு வந்துட்டே பார்த்தியா? அப்படி இறைவன் நம்மிடம் வந்து வெளிப்பட்டு இந்த பூலோக வாழ்க்கையை பூரணப்படுத்த சிருஷ்டி ஏற்பட்டதுன்னு ஸ்ரீ அரவிந்தர் சொல்கிறார். நம்மைத் தேடி பிரியமா ஒத்தர் வந்தா நாம அவாள பிரியமா வரவேற்க மாட்டோமா?

*அம்மா:* நீ என்ன சொல்ற கார்த்தி. கேட்கவே உடம்பெல்லாம் சிலிர்க்கிறதே.

*கார்த்தி:* ஆமாம்மா, மோட்சங்கறது மனிதன் நாடும் பேரின்பமாம், இறைவனாகவே நாம் மாறி இறைவனின் திருவுள்ளத்தை பூலோகத்தில் பூர்த்தி செய்யறது இறைவன் நாடும் பேரின்பமாம். இப்போ சொல்லு உன் இன்பம் உனக்குப் பெரிசா? இறைவன் இன்பம் உனக்குப் பெரிசா?

*அம்மா:* இறைவன் மேல உள்ள அன்பாலதான் இறைவனை வழிபடறோம். அவர்தாம் நம்மைச் சந்தோஷப்படுத்த முடியும். நாம எப்படி அவரைச் சந்தோஷப்படுத்த முடியும்?

*கார்த்தி:* நாம சொல்வதை அவர் கேட்க வேண்டும் என்பதற்குப் பதிலாக, அதாவது நம் பிரார்த்தனைகளை அவர் நிறைவேற்ற வேண்டும் என்பதற்குப் பதிலாக, அவர்



திருவுள்ளம் புவியில் நிறைவேற நாம் அவருடன் ஒத்துழைப்பது சிறந்ததல்லவா?

*அம்மா:* அதெல்லாம் சரிதான் கார்த்தி. கடவுள்தான் சர்வ வல்லமை உடையவர். நாமோ, அவரை நம்பியிருக்கிறோம். இதில் அவருடன் ஒத்துழைக்க நம்மிடம் என்ன இருக்கிறது?

*கார்த்தி:* ஒன்றிருக்கிறது. அவரிடமில்லாத ஒன்று நம்மிடம் இருக்கிறது. அதைக் கொடுத்து விட்டால் சரியாகி விடும்.

*அம்மா:* அப்படியா? அப்படி என்ன அவரிடமில்லாதது நம்மிடமிருக்கிறது?

*கார்த்தி:* அகந்தை என்ற ஒன்றிருக்கிறது அதைக் கொடுத்து விட்டால் போதும்.

*அம்மா:* கார்த்தி என்னடா சொல்றே? எப்பிடிடா இது சாத்யம்?

*கார்த்தி:* அதான்மா நாம நல்லவன்னு எல்லாரும் சொல்லணும். நம்மை எல்லாரும் கொண்டாடணும். அது இதுங்கறதையெல்லாம் விட்டுட்டு நமக்குள்ள கடமை எதுவானாலும் அவன் கொடுத்தது என்று உணர்ந்து அதை அவனுக்கு அர்ப்பணமாச் செய்யறதுதான் அதற்கு வழி.

*அம்மா:* சரி, வேதத்தைப் பாதுகாக்கிறது நம்ம கடமை இல்லையா? அதைச் செய்ய வேண்டாமா?

*கார்த்தி:* ஆமாம்மா. அதைப்பத்தியும் நான் படிச்சேன். வேதத்தை எழுதி வைத்துக் காப்பாற்ற வேண்டியதில்லை. அதன் சொல்லுக்குள்ள மந்திர சக்தி தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளக் கூடியது. எழுதுகிற தாள் எப்படி ஒரு கருவியோ அதுபோல் நினைவு வைத்துள்ள மனமும் ஒரு கருவியே என்று ஒரு செய்தியும் படிச்சிருக்கேன்.

*அம்மா:* அப்படியே பார்த்தாலும் வேதம் அதன் சொல்லுக்குள்ள சக்தியால் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் சக்தியுடையது என்கிறாயே. அந்தச் சக்தியைப் பெறத்தானே மனிதர்கள் வேதத்தை ஓதுகின்றனர். அது எப்படித் தேவையற்றதாகும்?

*கார்த்தி:* ஓதுவதைத் தவறென்று சொல்லவில்லை. ஓதும் தகுதி பெறாமல் ஓதுவது தேவையற்றது என்கிறேன். அதை ஓதும் தகுதியைக் குடுமி, பூணூல் என்ற புற அடையாளங்களை வெச்சு நிர்ணயிக்கிறது சரி இல்லம்மா. அகம் நம்ப மனசு சுத்தமாகாமல், சத்தியத்தால் நிரம்பி வழியாமல் எத்தனை முறை எவ்வளவு வேதம் படிச்சாலும் பயனில்லம்மா. வேதம்னா சத்யம். சத்யம்ங்கற நெருப்பு. அந்த நெருப்பை அடைய நெருப்பாகணும். வேற எதுவாயிருந்தாலும் அது எரிச்சுடும். அதையடைய அசாத்யத் தைரியம் வேணும். அதைத்தான் ஸ்ரீ அரவிந்தர், பிராமணன் ஆகுமுன் பூரண க்ஷத்ரியன் ஆகணும்னு சொல்லியிருக்கார். பொய்யும், தப்பும் செய்து கொண்டு வேதோபாசனை செய்து பயன் இல்லைம்மா. அது வெறும் சம்பிரதாயம் ஆகிவிடும். சம்பிரதாயங்கள் ஜீவனற்றவை. மேலும் வேத ஸ்வரூபியான இறைவனைக் காண நாம் மோட்சம் பெறத் தேவையில்லை. அவர் நம்முள் வெளிப்படக் காத்திருக்கிறார் என்பதால் அவர் நம்மில் வெளிப்பட ஏதுவாக நாம் அகமும், புறமும் சத்தியத்தால் நிறைவதே இன்றைய தேவை. அதற்கு அளவு கடந்த தைரியம் வேண்டும். முதலில் அதைப் பெறுவோம்.

*அம்மா:* அப்டீன்னா வேதோபாசனை தேவையில்லை என்கிறாயா?

*கார்த்தி:* இல்லைம்மா. அப்படிச் சொல்லலை. பாராயணம் செய்வதைவிட நடைமுறைப்படுத்துவதுதான் தேவை என்கிறேன். அம்மா! நம்பளவா கல்யாணங்களில் எத்தனை மந்திரங்கள் சொல்லப்படுகின்றன? அவற்றின் பொருள் நம்மில் யாருக்கேனும் தெரியுமா? ஐயர் சொல்லும் மந்திரத்தை மாப்பிள்ளைத் திருப்பி ஒரு தரம் சொன்னால் போதும் என்பது போல் நடைமுறை இருக்கிறது. இது அர்த்தம் புரியாமல் பாடத்தை மனப்பாடம் செய்வதைப்போல் சிறு பிள்ளைத்தனமாய் இல்லையா? இன்னும் பல இடங்களில் மாப்பிள்ளை மந்திரங்களை உச்சரிப்பது



கூட இல்லை. பொருள் புரிந்து அதை உள்ளே வாங்கிக் கொண்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டாமா? சாங்கியமாகவும், சடங்குகள் சம்பிரதாயமாகவும் வாழ்க்கையை நடத்துகிறோம். நாம் படித்துப் பயன்பட வேண்டும் என்று எப்படியாவது பாராயணம் செய்யட்டும் என்ற முறை ஏற்பட்டிருக்கும். நாமோ அவற்றை நம் ஜீவனில் ஏற்பதேயில்லை.

*அம்மா:* வேதத்தை ஓதி நம் ஜாதியை மதத்தைக் காப்பாற்றாமல் கடமை தவறுகிறோம் என்றல்லவா நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன் (என்று வியப்புடன் கூறுகிறாள்)

*கார்த்தி:* நீ மட்டும் இல்லையம்மா. நெறைய பேர் இப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீ சொன்னதில் ஒன்று சரி. ஒன்று தவறு.

*அம்மா:* என்ன கார்த்தி சொல்றே, புரியும்படி சொல்.

*கார்த்தி:* வேதம் கற்பது சிறந்தது. ஆனால் அது ஜாதியை மதத்தைக் காப்பாற்றவோ சாதிமதப் பிரிவினைக்கோ ஏற்பட்டதில்லை. பரப்பிரம்மத்தை உணர, உணர்ந்து இன்புற ஏற்பட்டது. ஸ்ரீ அரவிந்தர் வேதத்தைப் பத்தி என்ன சொல்லியிருக்கார் தெரியுமா?

மனிதனுள் பரமாத்மா சொல்லாக வடிவெடுத்தது வேதம் என்று சொல்லியிருக்கார்.

*அம்மா:* கார்த்தி எப்டிடா உனக்கு இந்தப் பெரிய விஷயமெல்லாம் தெரியறது? (வியப்புடன் மகனைப் பார்க்கிறாள்)

*கார்த்தி:* அதுவா அம்மா? ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் ஆறுமணியானா டாண்னு ஆபிஸ் போற மாதிரி போயிடற. மெதுவா எட்டு மணிக்குத்தான் வரே என்று சொல்லுவியே. அந்த ஆபிஸில்தான் இதெல்லாம் தெரிஞ்சுண்டேன்.

*அம்மா:* அட! இதெல்லாம் ஆபிஸ் வச்சு நடத்தறாளா?

*கார்த்தி:* (சிரித்துக்கொண்டே ) அம்மா! 'ஸ்ரீ அன்னை அரவிந்தர் தியான மையம்' என்று ஒருவர் நடத்துகிறார். அங்கே ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை நமக்காகச் சொன்னதை எல்லாம் எடுத்துச் சொல்றா. லைப்ரரியும் வெச்சுருக்கா. அங்க போயிதான் இதெல்லாம் தெரிஞ்சுண்டேன்.

*அம்மா:* அதனால நீ இப்ப என்ன சாதிச்சிருக்க?

*கார்த்தி:* முதல்ல சுத்தம் முக்கியம்னு தெரிஞ்சுண்டேன். அதனாலதான் வண்டியைத் துடைக்கிறேன். வீட்டைக் கிளீன் பண்றேன். ரூமை நன்னா வெச்சுக்கறேன்.

*அம்மா:* கார்த்தி எல்லாம் சரி. என்ன பலனைக் கண்டே.

*கார்த்தி:* இப்ப உனக்கு அதெல்லாம் சொல்ல முடிஞ்சது ஒரு பலன்தானே. (இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே எதிர் வீட்டு சாஸ்திரிகள்மாமா இவர்களை நோக்கி வருகிறார். கார்த்தியின் அம்மா, அரைகுறையாய் இவர்கள் பேசியதைக் கேட்டுக்கொண்டு சண்டை இட வருகிறாரோ என்றஞ்சி ஒன்றும் புரியாது எழுந்து நிற்க கார்த்தியோ கம்பீரமாக, பணிவாக வரவேற்கிறான்).

*கார்த்தி:* வாங்கோ மாமா

*மாமா:* கார்த்தி! நான் இவ்வளவு படிச்சு, இத்தனை வயசாகி உன்னைப் போல நான் ஒரு நாளும் சிந்திச்சது இல்லையப்பா. நான் பெரிய வேதப் பிராமணன் என்ற கர்வம்தானிருந்தது. எத்தனை அழகா அம்மாவுக்கு எடுத்துச் சொன்னே. உன் கால்ல விழுந்தாலும் தப்பில்ல. என் அகம்பாவம் அவ்வளவு சீக்கிரம் ஒத்துக்காது. நீ நாளையிலிருந்து என்னண்டை வந்து வேதம் கத்துக்கோ. அதனால நான் ஸ்ரீ அரவிந்தர் பத்தி உங்கிட்ட தெரிஞ்சுப்பேன் (என்று அவன் கையைப் பற்றி உருக்கமாய்ச் சொன்னார்)

*கார்த்தி:* ஆகட்டும் மாமா நிச்சயமா வந்து வேதம் கத்துக்கிறேன்.

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## பாவம், புண்ணியம்

பாவம் செய்தால் நரகத்திற்கும், புண்ணியம் செய்தால் சுவர்க்கத்திற்கும் போகலாம் என்பது நம்பிக்கை. பாவமும், புண்ணியமும் இரு செயல்கள். அவற்றுள் வேறுபாடில்லை. செயலுக்குப் பாவ, புண்ணியமில்லை. பாவம், புண்ணியம் என்பது செய்யும் மனிதனுக்குண்டு. அவன் மனநிலைக்குண்டு. பாவத்திற்கு மன்னிப்புண்டு என சர்ச் கூறுகிறது. பாவம் செய்தவன் மனம் மாறினால் ஆண்டவன் அவனை மன்னிப்பார் என கிருஸ்த்துவ மதம் கூறுகிறது. அன்று செய்தது பாவம் என, இன்று மனம் மாறினால் செய்த பாவம் புண்ணியமாகும் என்பது திருவுருமாற்றம். காணிக்கை வேண்டாம், ஆசீர்வாதம் போதும் என வீராப்பாகப் பேசிய பாவம், மனம் மாறி காணிக்கையை அவரே தர முன்வந்ததால், பாவத்தின் பலன் மாறி புண்ணியத்தின் பலன் வந்தது. கடந்தகால நிகழ்ச்சியை சமர்ப்பணத்தால் இப்பொழுது மாற்றலாம் என்று பகவான் கூறுகிறார். பெரிய குற்றம் செய்து பெரிய தண்டனை பெற்றபின், தண்டனையை அமுலுக்குக் கொண்டு வருமுன், வந்த மனமாற்றம் தண்டனையை ரத்து செய்து நிலைமையைத் தலைகீழே மாற்றி, பெரும் பரிசு வாழ்வு கொடுத்ததும் அன்பர் அனுபவத்தில் உண்டு. காலம் மாறியதால் அன்று பாவம் எனக் கருதிய செயல்களை இன்று புண்ணியம் எனக் கருதும் நிலையும் சில விஷயங்களில் ஏற்பட்டுள்ளது.

## கறுப்புப்பணம்

பணம் உழைப்பால் வருவது. பணம் கறுப்பல்ல. பணத்தைச் சம்பாதிக்கும் மனிதன் கறுப்பாக இருக்கிறான். நாட்டில் வருமான வரியை எடுத்து விட்டால், வரி கட்டாதவன் இருக்க மாட்டான். அதன் பிறகு கறுப்புப் பணமிருக்காது. பெண்ணுக்குக் கற்பு சட்டம் உள்ளவரை நல்லவள், கெட்டவள் என்ற பாகுபாடு உண்டு. மேல் நாடுகளில் அது இப்பொழுது இல்லை. அன்று தவறான பெண், காலம் மாறியதால், இன்று தவறானவளில்லை எனக் கருதப்படுகிறாள். லைசென்ஸை இலஞ்சம் கொடுத்து வாங்குவது ஊழல். ஏலம் விட்டால் அதிக விலை கொடுத்துப் பெறுவது ஊழலில்லை. சட்டம் மாறும். அதுபோல் மன நிலை மாறும். மன நிலையைப் பொறுத்து மாறும் விஷயம் மனிதனைப் பொறுத்தது. நரகம், சுவர்க்கம் என்பது ஆத்மா போய் தங்குமிடம் இல்லை, மனிதனுடைய வேறுபட்ட மன நிலை என்ற கருத்துண்டு. சாவித்திரி-யிலும் வருகிறது. தவறு, பாவம் என்பவை மன நிலைகள். என்றும் உள்ள உயர்ந்த நிலைகளில்லை. அதனால் கறுப்புப் பணம் சரியெனக் கொள்ள முடியாது. தாயார் திருமணமாகாமல் பிறந்த பெண் தன்னிலையறிந்து மனநிலை உயர்ந்த — திருவுருமாறி — பொழுது, பெரும் சொத்து அவளை நாடி வந்து, குறை கூறிய அனைவரும் அளவு கடந்து போற்றும் நிலையை அடைகிறாள். வாழ்வில் நிகழும் திருவுருமாற்றமிது.